பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

மங்கள வைபவமா?
நீங்கள் நாடவேண்டிய
ஒரே ஸ்தாபனம்
ராஜ்கோபால்ஸ்
(பட்டுச் சேலைகளின் காட்சியகம்)
47, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை ரூ 2.50

ஜவுளி வியாபாரிகளுக்கு
ஓர் நற்செய்தி!
பூகொட
தயாரிப்புக்களின்
பிடவைத்தினுசுகளுக்கு
வடமாகாண ஏக
விநியோகஸ்தர்கள்
ராஜ்கோபால்ஸ்
பூகொட மொத்த,
சில்லறை விற்பனையாளர்கள்
47, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

சுடர் 4 விபவ ஞூ பங்குனி மீ 16 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1409 ஷஃபா பிறை 20 (29 - 03 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:-97

# கொலைச் சம்பவங்கள் குடாநாட்டில் அதிகரிப்பு

## பின்னணி யார் எனத் தெரியாமல் ஆங்காங்கே நடக்கும் சம்பவங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 29

கடந்த சில நாட்களாக குடாநாட்டில் துப்பாக்கிச் சூட்டுக் கொலைகள் மீண்டும் திடீரென அதிகரிக்கத் தொடங்கி உள்ளன நாளாந்தம் ஆங்காங்கே மனித உயிர்கள் பறிக்கப்படுகின்றன.

கிராமங்கள், நகரங்கள் என்ற இட வேறுபாடு இன்றித் திடீர் திடீரென மக்கள் சுட்டுக் கொல்லப்படுகின்றனர். இந்தக் கொலைகளுக்குப் பின்னணியில் நிற்பவர்கள் - கொலையைச் செய்பவர் யார் என்பதை உடனுக்குடன் இனங்காண முடியாமல் உள்ளது.

அதிகரித்து வரும் கொலைகளை உறுதிப்படுத்தும் விதத்தில், உதாரணம் காட்டும் விதத்தில் யாழ்ப்பாண நகரப் பகுதியில் நேற்று மட்டும் நான்கு பேரும், தெல்லிப்பளையில் ஒருவருமாக ஐந்து பேர் துப்பாக்கி வேட்டுக்கு இரையாக்கப் பட்டார்கள்.

கடந்த வெள்ளி, சனி, ஞாயிறு, திங்கட்கிழமைகளிலும் குடாநாட்டின் பல பகுதிகளிலும் சேர்த்துத் தினமும் சராசரி மூவர் கொலையுண்டனர்.

ஆனைப்பந்தியடியில் மட்டும் நேற்று இரண்டு பேர் துப்பாக்கிச் சூட்டினால் மரணமானார்கள்.

நண்பகலில் நடந்த முதலாவது சம்பவத்தில் அமிர்தவாசகம் குயின்டன் பிரான்சிஸ் என்ற 37 வயதானவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அவர் பாஷையூரைச் சேர்ந்தவர். சைக்கிளில் அழைத்துவரப்பட்டுச் சுடப்பட்டார். இவர் யாழ்-கொழும்பு புத்துறை சேவையில் ஈடுபட்டுள்ள மினி பஸ்களில் ஒன்றின் சொந்தக்காரர் என்று அறியப்படுகிறது.

ஆனைப்பந்தியடி இரண்டாவது சம்பவத்தில், பசுபதி சந்திரபோஸ் என்ற 23 வயது இளைஞர் சுட்டுக்கொல்லப் பட்டார். இவர் கொட்டடியைச் சேர்ந்தவர். இவர் வைத்தீஸ்வரக் கல்லூரிக்கு அருகில் வானொலி திருத்தும் கடை ஒன்றின் உரிமையாளர் எனத் தெரிவிக்கப்பட்டது.

மூன்றாவது கொலைச் சம்பவம் வைத்தீஸ்வராச் சந்தியில் நேற்று மாலை 6-30 மணிக்கு இடம்பெற்றது. இதில் கொல்லப்பட்டவர் செபஸ்ரி யேசுதாசன். 37 வயதானவர்.

[8 ஆம் பக்சம் பார்க்க]

## நல்லூர், பாஷையூர் நேற்று சுற்றிவளைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 29

நல்லூர், அரசடிப் பகுதியும் யாழ்ப்பாணம் பாஷையூர்ப் பகுதியும் நேற்று மாலை அமைதிப் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டன.

நல்லூர் பின் வீதியிலிருந்து அரசடி வரையுள்ள பகுதிகளை படையினர் நேற்று மாலை திடீரெனச் சுற்றிவளைத்தனர்.

இதனால் இப்பகுதியூடான போக்குவரத்துக்கள் நேற்று மாலை நாவலர் வீதியூடாகத் திருப்பி விடப்பட்டன.

இப்பகுதியில் இருந்த இளைஞர்கள் பலர் விசாரணைக்காக கொண்டுசெல்லப்பட்டனர்.

இதேசமயம் பாஷையூரில் இடம்பெற்ற தேடுதலின் போது பலர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை பாஷையூர் புனித அந்தோனியார் கோவிலில் வழிபடுவதற்காக வந்திருந்த இளைஞர்கள் பலரும் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டதாகக் கூறப்பட்டது.

இவர்கள் அனைவரும் புனித அந்தோனியார் கோவிலுக்குப் பின்பகுதியில் உள்ள வீடு

[8 ஆம் பக்சம் பார்க்க)

## முல்லைத்தீவு மக்களுக்கு 2 ஆம் கட்ட நிவாரணம்

### யாழ். செஞ்சிலுவைச் சங்கம் முயற்சி

இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்ட மக்களுக்கு இரண்டாம் கட்ட நிவாரணப் பொருள்களை வழங்குவதற்கு யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

செஞ்சிலுவைச் சங்க அதிகாரி ஒருவர் இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

இப்பகுதி மக்களுக்கு உணவுப் பொதிகளையும் உடைகளையும் முதல் கட்ட நிவாரணமாக யாழ் செஞ்சிலுவைச் சங்கத்தினர் வழங்கியுள்ளனர்.

செஞ்சிலுவைச் சங்கத்தின் வேண்டுகோளின் பேரில் யாழ் மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் சுமார் ஒரு லட்சத்து 12 ஆயிரம் ரூபா பெறுமதியான உணவுப்பொருள்களை முதல்கட்ட நிவாரணத்திற்கென வழங்கியிருந்தது தெரிந்ததே. [உ-5]

## பத்திரிகைகள் காட்டும் தவறுகளை கவனியுங்கள்

### அமைச்சர்களுக்கு ஜனாதிபதி பணிப்பு

கொழும்பு, மார்ச் 29

பத்திரிகைகளை தினமும் வாசித்து அவை சுட்டிக் காட்டும் குறைபாடுகளைக் களைய நடவடிக்கை எடுக்கும்படி ஜனாதிபதி அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரச சபைகளைப் பணித்திருக்கிறார். [உ-எ]

## தோட்டத்தில் கிடந்த ஷெல் வெடித்து இளைஞர் காயம்

யாழ்ப்பாணம், மார்ச 29

வாழைத் தோட்டத்தில் கிடந்த பழைய ஷெல் ஒன்று வெடித்ததில் இளைஞர் ஒருவர் காயமடைந்தார்.

ஊரெழுப் பகுதியில், நேற்றுப் பகல் இச் சம்பவம் இடம்பெற்றது.

காயமடைந்தவர் சின்னராசா சந்திரகுமார் (வயது 17).

இவர் வாழைத் தோட்டத்துக்கு தண்ணீர் இறைக்கச் சென்றதாகவும்-

அவ்வேளை அங்கே கிடந்த ஷெல் ஒன்றை எடுத்து உரசிப் பார்த்தபோது அது வெடித்ததாகவும் கூறப்படுகிறது.

கையில் படுகாயமடைந்த நிலையில் அவர் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார். (உ-10)

## முத்திரைத் தட்டுப்பாடு நீங்கியது

யாழ்ப்பாணம், மார்ச் 29

யாழ்ப்பாணம் தபால் நிலையத்தில் ஏற்பட்டிருந்த முத்திரைத் தட்டுப்பாடு தற்பொழுது நீங்கியுள்ளது.

தேவையான பெறுமதியுடைய முத்திரைகளையும் வான்கடிதங்களையும் பொது மக்கள் யாழ் தபாலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என தபாலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-10)

## நேற்றும் இயங்கவில்லை

யாழ்ப்பாணம், மார்ச் 29

யாழ்ப்பாணத்தில் வங்கிக் கிளைகள், செயலகம், உதவி அரசாங்க அதிபர் பணிமனைகள் என்பன நேற்றும் மூடிக் கிடந்தன.

நேற்று சில வங்கிகளுக்கு முன் படையினர் காணப்பட்டனராயினும் ஊழியர்களையோ பொதுமக்களையோ காணமுடியவில்லை. (உ-10)

## முச்சந்தி முரளி



கூட்டுக்கு அச்சவாரமாய் கூட்டு வெளிநடப்போ......!

## சுபநேரம்

29 - 03 - 1989
பங்குனி 16
புதன்கிழமை
சுபநேரம்:
04 - 43 முதல் 6 - 13 வரை
ராகுகாலம்:
12 - 13 முதல் 01 - 43 வரை

## கிளிநொச்சி, பரந்தன், முல்லைத்தீவு, மாங்குளம் வங்கிகளின் அடகு நகைகள் ஏப்ரலில் மீளளிப்பு

கிளிநொச்சி, பரந்தன், முல்லைத்தீவு, மாங்குளம் பகுதி மக்கள் வங்கிகளில் அடகு வைக்கப்பட்ட நகைகள் ஏப்ரல் முதல்வாரத்தில் இருந்து உரியவர்களிடம் மீளளிக்கப்படும் என மக்கள் வங்கி நிர்வாகம் அறிவித்துள்ளது.

அடகு நகைகளைக் கொண்டு வருவதற்காக வங்கி அதிகாரிகள் கொழும்பு சென்றுள்ளனர், சில தினங்களில் நகைகள் அங்கு வந்து சேரும் என்றும் -

நகைகள் வந்து சேர்ந்ததும் பத்திரிகை வாயிலாக நகைகள் மீளளிப்பு குறித்து அறிவிக்கப்படும் என்றும் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை மேற்படி இடங்களில் உள்ள வங்கிக் கிளைகள் வாரத்தில் மூன்று நாட்கள் தற்போது இயங்கி வருவது தெரிந்ததே. (உ-10

## இ. காங்கிரஸ் - ஜெயலலிதா அணி கூட்டணி அமைப்பதற்கு முடிவு!

புதுடில்லி, மார்ச் 29

நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாடு மாநிலத்தில் இந்திரா காங்கிரஸ் ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. வுடன் கூட்டுவைத்து போட்டியிடும் என்று அறிவிக்கப் படுகிறது.

புதுடில்லியில் இந்திராகாங்கிரஸ் தலைமைப்பீடம் இது சம்பந்தமாக தீர்மானித்து விட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

செல்வி ஜெயலலிதாவின் நிபந்தனைகளை ஏற்றேநாடாளுமன்றத் தேர்தல் கூட்டு அமைக்க இந்திரா காங்கிரஸ் முடிவு செய்திருக்கிறதாம்.

தமிழ்நாடு மாநிலத்தில் 39 நாடாளுமன்றத் தொகுதிகளும் பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்தில் ஒரு நாடாளுமன்றத் தொகுதியும் இருக்கின்றன.

மொத்தமாக உள்ள 40 தொகுதிகளில் 20 இல் அ.தி.மு.க. போட்டியிடும்; எஞ்சிய 20 இல் இந்திராகாங்கிரஸ் போட்டியிடும். இந்த அடிப்படையில் இருகட்சிகளும் உடன்பாடு கண்டிருப்பதாகத் தெரியவருகிறது.

இது சம்பந்தமான உடன்படிக்கை, தமிழ் நாடு சென்று திரும்பிய மத்திய வர்த்தக அமைச்சர் தினேஷ் சிங்கில் அறிக்கையைத் தொடர்ந்தே கைசாத்திடப்படலாம் என்று சொல்லப்படுகின்றது.

இதே வேளை —

தமிழ் நாடு சட்டசபைத் தேர்தலில் இத்தகைய தேர்தல் கூட்டு வைப்பதற்கு எதிராக இருந்த திரு. ஜி. கே. மூப்பனார், இணை அமைச்சர் பி. சிதம்பரம் ஆகியோரை ஒதுக்கி வைக்க வேண்டும் என்று காங்கிரஸ் தலைமைப்

(8ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டாக வெளிநடப்பு

சென்னை, மார்ச் 28

தமிழ்நாடு சட்டசபைக் கூட்டத்தில் அ.தி.மு.க.(ஜே) எம். எல். ஏக்களும் இந்திரா காங்கிரஸ் எம். எல். ஏக்களும் கூட்டாக வெளிநடப்பு செய்தனர்.

நேற்று சட்டசபை கூடியதும், இந்திரா காங்கிரஸ் எம். எல். ஏ. குமரி அனந்தனும் அ. தி. மு. க. எம். எல் ஏ. எஸ். திருநாவுக்கரசுவும் கடந்த சனிக்கிழமை சட்டசபையில் இடம்பெற்ற வன்செயல்கள் பற்றி விவாதிக்க அனுமதியளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டனர்.

சபாநாயகர் அனுமதி அளிக்க மறுக்கவே இந்திரா காங்கிரஸ் அ. தி மு. க. எம். எல். ஏக்கள் வெளிநடப்புச் செய்தனர். (உ-எ)

## ஜெயலலிதா அணிக்கு அ. தி. மு. க அந்தஸ்து

சென்னை, மார்ச் 29

அ. தி. மு. க ஜெயலலிதா அணி இனிமேல் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் என்றே அழைக்கப்படும் என்று தமிழ்நாடு சட்ட சபையில் சபாநாயகர் திரு. தமிழ்க் குடிமகன் அறிவித்தார்,

முன்னாள் சபாநாயகர் பி. எச். பாண்டியன் உறுப்பினராக உள்ள அ. தி. மு. க [ஜா] அணி மட்டுமே அதே பெயரிலேயே தொடர்ந்து இயங்கும் என்றும் சபாநாயகர் தெரிவித்தார். [உ-எ]

## வெங்காய விவகாரம் மரணத்தில் முடிந்தது

வடமராட்சி, மார்ச் 29

வெங்காய விவகாரம் மரணத்தில் முடிந்தது!

வெங்காயம் வாங்கவந்தவர்கள், விலை பேசுவதில் தகராறு ஏற்பட்டதும் பெண்மணி மீது லொறியை ஏற்றியதாகக் கூறப்படும் சம்பவம் ஒன்று வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சமரபாகு என்ற இடத்தில் நடந்துள்ளது.

அந்தப் பெண் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்சப்பட்டு மரணமானார்.

இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

கடந்த ஞாயிற்றுக்கிழமை எஸ். நாகம்மா என்ற பெண்மணியின் வீட்டுக்குச் சிலர் லொறியில் வந்தனர்.

அவரிடம் இருக்கும் வெங்காயத்தை வாங்கப்போவதாகக் கூறினர். வெங்காயம் லொறியில் ஏற்றப்பட்டது.

அதற்குப் பின்னர் வெங்காயத்துக்கான விலை பேசும் படலம் ஆரம்பித்தது.

பெண் அதி வி கூறுவதாக லொறியில் வந்தவர்கள் தகராறு செய்தார் ள்.

உரிய பணத்தைத் தராவிட்டால் லொறியை விடப் போவதில்லை என்று பெண்மணி அடம்பிடித்தார்.

இதனையடுத்து லொறியில் வந்தவர்கள் பெண்ணை லொறியினால் மோதினார்கள். பின் ஓடித்தலைமறைவாகி விட்டார்கள்.

பெண்மணி மந்திகை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். செவ்வாய்க்கிழமை அங்கு மரணமானார்.

வெங்காயம் வாங்க வந்தவர்கள் கொண்டு வந்த லொறி இலக்கம் தெரியும் என்றும் அதனைத்தேடி இப்போது வேட்டை நடப்பதாகவும் அறியப்படுகிறது. [அ-160]

## தக்கர் கமிஷன் அறிக்கை மீது பல சட்டசபைகளில் அமளிதுமளி

புதுடில்லி, மார்ச் 29

தக்கர் கமிஷன் அறிக்கை மீது விசாரணை நடத்த வேண்டும் என்ற பிரச்சினை இந்தியாவின் பல மாநில சட்டசபைகளில் குழப்பத்தை ஏற்படுத்தியது.

பீஹார் மாநில சட்டசபையில் இதனால் பெரும் கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டது. மைக்குகள் பிடுங்கி எறியப் பட்டன.

ஒரே சமயத்தில் உறுப்பினர்

8ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ளியன்றே சந்திக்கலாம்

யாழ். கல்வித் திணைக்களத்தில் வெள்ளிக்கிழமைகளில் மட்டுமே பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் பிரதிக் கல்விப் பணிப்பாளரைச் சந்திக்க முடியும்.

இந்த நடைமுறை அடுத்த வாரத்தில் இருந்து செயல்படுத்தப்படும் என பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி ரி. பெரியதம்பி தெரிவித்தார்.

இதேவேளை யாழ். கல்வித் திணைக்களத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்ட அதிகாரிகள், உரிய காலத்திற்கு வந்து தமது பணிகளைப் பொறுப்பேற்காததன் காரணமாக வேலைகள் தாமதமடைவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். [உ-10]

## வடக்கு, கிழக்கு வரட்சியால் பாதிப்பு

கொழும்பு, மார்ச் 29

வடக்கு, வடமத்திய மாகாணங்கள் மோசமான வரட்சியினால் பாதிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பத்து லட்சத்துக்கு அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என அரசு அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

வரட்சியால் பாதிக்சப்பட்டவர்கள் உணவு முத்திரை தவிர்ந்த வேறு வருமானங்களை

[8 ஆம் பச்சம் பார்க்க]

## அனுமதிக் கார்ட் கிடைக்கவில்லை

யாழ்ப்பாணம், மார்ச் 29

அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கான சுருக்கெழுத்தாளர் ஆட்சேர்ப்பு போட்டிப் பரீட்சைக்குரிய அனுமதிக் கார்ட் பரீட்சார்த்திகளுக்கு நேற்றுவரை கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் முதலாம் திகதி கொழும்பில், இப் பரீட்சை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இருந்த போதிலும் அனுமதி கார்ட் இதுவரை கிடைக்காததால் பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்கள் என்ன செய்வது என்று தெரியாமல் கஷ்டப்படுகின்றனர்.

[உ-70-10]

## நகரில் மற்றொரு சடலம்

யாழ்ப்பாணம், மார்ச் 29

யாழ் நகரில் வெலிங்டன் தியேட்டர் சந்தியருகே - பி. எம். எஸ். ஒழுங்கைக்கு முன்னால் நேற்றிரவு மற்றொருவர் சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ]

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## கடை விற்பனைக்கு

வேலணை மணியகாரன் வீட்டுக்கு அண்மையில் சகல வசதிகளையும் கொண்ட 1/½ பரப்பு காணியுடன் அமைந்த கடை விற்பனைக்குண்டு தொடர்பு கொள்க: 152 B, அரசடிவீதி, கந்தர்மடம், நல்லூர், யாழ்ப்பாணம். (10209)

## விறகு விற்பனை

காட்டு விறகு தூக்கு 50/- ருபா, பனை மரம் பாவித்த மாம்பலகை ஆகியன விற்பனைக்குண்டு. ஐயப்பன் விறகு டிப்போ, 81, செட்டித்தெரு, நல்லூர். (10210)

## ஓடுகள் விற்பனைக்கு

இந்தியன் பவுண்மார்க் ஓடுகள் 1500 விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: சுகலக்ஷ்மி ஸ்ரோஸ், மாட்டீன் ரோட், யாழ்ப்பாணம். (10736)

## கோழிக்குஞ்சு விநியோகம் UPLANDS FARM

நாற்பத்தைந்து நாட்களில் வளர்ச்சியடையும் (Lohmann) (Dekalb) சேவல்குஞ்சு விலை ரூ. 4.50. (29-3-89) புதன்கிழமை விநியோகிக்கப்படும். கூடுதலாக எடுப்பவர்களுக்கு விசேஷ சலுகை உண்டு முன் கூட்டியே பதிவு செய்க இல. 9 கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்துக்கு அண்மையில்) (10708)

## கோழிக்குஞ்சு விநியோகம்

Golden Comet, பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், கறுப்பு சேவற் குஞ்சுகள் 29ஆம் திகதி புதன்கிழமையும் Bairaha Farm புரொயிலர் குஞ்சுகள், பிறவுண் பேட்டுக்குஞ்சுகள், பிறவுண் சேவற் குஞ்சுகள், Hyline வெள்ளை கறுப்பு பேட்டுக் குஞ்சுகள் 30 ஆம் திகதி வியாழக்கிழமையும் விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படிலேன், கொக்குவில். [10727]

Nallur Farm Centre Prima Lohman வெள்ளை, சிவப்புப் பேட்டுக்குஞ்சுகள், சிவப்பு சேவற்குஞ்சுகள், Golden Comet சிவப்புப்பேட்டுக்குஞ்சுகள், Hy-line கறுப்பு வெள்ளை Silver பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு புதன் கிழமைகளிலும் விநியோகிக்கப்படும். 25 குஞ்சுகளுக்கு மேல் கொள்வனவு செய்வோருக்கு படிப்படியாக விலையில் சலுகை உண்டு. C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (C/1770)

[Lohmann)& [Dekalb] பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், பிறவுண் சேவல் குஞ்சுகள் [பிலிமத்] கறுப்பு சேவல் குஞ்சுகள் [29-3-89] புதன்கிழமை விநியோகிக்கப்படும். சொண்டு வெட்டப்பட்டது. தடுப்பூசி போடப்பட்டது. முற்கூட்டியே பதிவு செய்க. இல 9, கந்தையா லேன், சுன்னாகம். [புகையிரத நிலையத்துக்கு அருகாமையில்](10125)

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

Broiler இறைச்சிக்கோழிகள், பேட்டுக்கோழிகள், சேவற்கோழிகள், சூப்குஞ்சுகள், விருத்துக்குஞ்சுகள் என்பன குறைந்த விலையில் எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம். சுகாதார முறைப்படி சுத்தம்செய்து கொடுக்கப்படும். Nallur Farm Centre, C/o. நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (C/1771)

## எவர் சில்வர் தயாரிப்புகள்

இல்லத்தரசிகளே! Gas அடுப்பிலோ, மின் அடுப்பிலோ சமைப்பதற்கேற்ற கண்ணைக் கவரும் பல்வகை தரமான எவர்சில்வர் பாத்திரங்களுக்கு தவறுமல் நாடுங்கள்: "Rajz Brand" எங்கும் விற்பனையாகின்றன. பலவிதமான அளவுகளிலும் டிசைன்களிலும் அடுக்குச் சட்டிகள், தாச்சிகள் Frying Panகள் இன்னும் பல காட்சி அறை S.A. தேவதாசன், சூராவத்தை, சுன்னாகம். (C1898)

## தேவை

சாவகச்சேரியில் ஆரம்பிக்கப்பட இருக்கும் தையல் நிலையம் ஒன்றிற்கு தையல் வேலையில் அனுபவமுள்ள பெண்களும் பயிலுநர்களும் தேவை. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: க. சிவதுரை, சந்திர பவனம், மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி. (10731)

ஓடியோ றெக்கோடிங் & வீடியோ கிளப்பில் வேலை செய்வதற்கு பெண்பிள்ளைகள் தேவை. விபரங்களுக்கு Liliya No. 2, Model Market Thirunelveli. (10206)

புடைவை ஸ்தாபனத்திற்கு Sales girls தேவை. விபரங்களுக்கு ஏசியன் ரெக்ஸ்ரைல்ஸ், பலாலிவீதி, திருநெல்வேலி சந்தி. (10206)

ஆனைக்கோட்டை- கூளாவடி புதுவாழ்வு நிலையத்தின் பிள்ளைகளுக்குப் படிப்பிக்க, மேற்பார்வை செய்ய குறைந்தது O/L படித்த பெண் தேவை. முந்திவரும் தகுதியுடையோருக்கு வாய்ப்பு உண்டு. போதகர். (10732)

## விசேட கழிவு

சுக்கில வருஷ இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம் திருக்கணித பஞ்சாங்கம் எம்மிடம் தொகையாகவும், சில்லறையாகவும் கிடைக்கும். கூடுதலாக வாங்குவோருக்கும், வியாபாரிகளுக்கும் விசேட கழிவு. விற்பனையாளர்: மக்மிலன் புத்தகசாலை, ஆஸ்பத்திரி வீதி, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (C/1574)

## செல்வா எலக்ரோனிக் கோப்

நீங்கள் விரும்பிய காதுக்கினிய பழைய புதிய பாடல்களை மிகவும் பெறுமதி வாய்ந்த நவீன ஒலிப்பதிவு சாதனங்கள் மூலம் (Stereo) முறைப்படி றெக்கோடிங் செய்து கொள்ள யாழ்நகரில் நாடவேண்டிய இடம்: செல்வா எலெக்ரோனிக் கோப், விவேகானந்த அச்சக முன்பாக உள்ள மேல்மாடி (மொம்சாக் கட்டடம்) 11ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். [10726]

## இடம் மாற்றம்

K. K. S வீதியில் அமைந்திருந்த சிறிலங்கா சலவைத் தொழிலகம் தற்போது சுன்னாகம் வாழைக்குலைச் சந்தை முன்பாக இடமாற்றம் அடைந்துள்ளதை வாடிக்கையாளருக்கு அறியத்தருகின்றேன். நடராசா (10724)

## புலமைப் பரிசிற் பரீட்சை

புதிய சிபார்சுகளுக்கு அமைய தயாரிக்கப்பட்ட 5ஆம் ஆண்டுக்குரிய புலமைப் பரிசிற் பரீட்சைக்குரிய கணிதம், தமிழ், பயிற்சிப் புத்தகம் விற்பனையாகின்றது. ஆக்கியோன்:- ஆ. ந. இராசேந்திரன் விலை ரூபா-40 மட்டும். கிடைக்குமிடங்கள்: யாழ் முன்னணிப் புத்தகசாலைகள். (10734)

## வகுப்புகள்

குறுகிய கால விசேட தொழில்நுட்ப பயிற்சிகள் Radio, T.V, Air Conditioning, Refrigeration வயறிங் வெல்டிங், வைண்டிங், பிளம்பிங், Typing, புதியபிரிவுகள் ஆரம்பமாகின்றன. சிறந்த செய்முறைப் பயிற்சிகளுடன் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழும் வழங்கப்படும். விண்ணப்பங்கள் முன் கூட்டியே பதிவு செய்யப்பட வேண்டும். Vispa Engineering Aid hall, 328, நாவலர் ரோட், ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (10197)

## NEW CITY TRADERS

சகல விதமான T V டெக், ரேடியோ, அன்ரனா பூஸ்ரர் வயர் பைப்செற், T D K Maxell Audio Video கசற், வீட்டுக்குத் தேவையான மணிக்கூடு, சிறுவர் விளையாட்டுப் பொருள்களைப் பெற்றுக் கொள்ளச் சிறந்த ஸ்தாபனம்: New City Traders 135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (C1839)

## TYPEWRITER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்திக்கொள்ளவும் தமிழ் ஆங்கில டைப்பிங் செய்து கொள்ளவும் நாடுங்கள்: Fudo Enterprises, 39/17, மின்சார நிலைய வீதி, 2-ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (C/1876)

## தவறிவிட்டது

சரவணமுத்து யோகானந்தம் ஆகிய எனது அடையாள அட்டை இல: 620992194V தீருவில் ஒழுங்கை, வல்வெட்டித்துறை) மாவடிச்கும் அராலி ஆஸ்பத்திரிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மயிலகம், மூளாய் ரோட். வட்டுக்கோட்டை எனும் விலாசத்தில் ஒப்படைக்கவும். (10202)

நயினுன் இராசமலர் (இராசம்மா) ஆகிய எனது அடையாள அட்டை இல. 685593319V 25-3-89இல் 764 பாதையிலக்க பஸ்வண்டியில் பிரயாணம் செய்தபோது தவறிவிட்டது. தயவுசெய்து இதனைக்கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (10733)

கந்தர்மடத்திலிருந்து யாழ்ப்பாணம் வரும் பாதையில் மோட்டார் சைக்கிளிலிருந்து டயறி அதனுள் காப்புறுதிப்பத்திரம் (Car) புகைப்படம் வாகனப்பத்திரம் என்பவை தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து T. சேனாதிராஜா அன் சன்ஸ் 20/4 ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணத்தில் ஒப்படைக்கவும். (10735)

## OH HOLY SPIRIT

THOU who makes me see everything and shows me the way to reach my ideal THOU who gives me the divine gift to forgive and forget the wrong that is done to me and who are in all instances of my life with me, I in this short dialogue want to thank Thee for everything and confirm once more that I never want to be separated from Thee no matter how great the material desire may be Want to be with Thee and my loved ones in your perpetual Glory Amen. Persons must say this Prayer for 3 consecutive days without stating one's wish. After 3 days your wish is granted no matter how difficult it may be Promise to Publish this Prayer. T. T. (10211)

## இந்திய அன்பளிப்பு பொருள்கள்

மட்டக்களப்பு, மார்ச். 29

வடக்கு கிழக்கு மாகாண சபைக்கு இந்திய அரசினல் அன்பளிப்பு செய்யப்பட்ட பொருள்களை விநியோகிக்க அரச அதிபர் தலைமையிலான குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழுவில் ஒவ்வொரு மாவட்டத்தை சேர்ந்த சபை உறுப்பினர்களில் ஐவரும் சுகாதாரப்பணிப்பாளர், கல்விப் பணிப்பாளர், கூட்டுறவு ஆணையாளர் ஆகியோரும் அங்கம் வகிப்பார்கள். குழுவின் தீர்மானப்படியே அன்பளிப்புப் பொருள்கள் விநியோகிக்கப்படும் (ச - 21)

## நூலகப் புத்தகங்கள்

அண்மைக்கால அசம்பாவித சம்பவங்களினல் சேதமடைந்த நூலகம் தற்போது புதுக்குடியிருப்பு பிரதேச சபை உப அலுவலகத்தில் இயங்கி வருகின்றது.

இந்நூலகத்தில் புத்தகங்களை இரவலாகப் பெற்றவர்கள் அவற்றைத் திருப்பி ஒப்படைக்குமாறு புதுக்குடியிருப்பு பிரதேச சபை உப அலுவலகத்தினல் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (க-126)

## எமது நேற்றைய புதிய வெளியீடு!

சரத்பாபு — சரண்யா — சில்க் ஸ்மிதா
Y. G. மகேந்திரன் நடித்த

### அன்று பெய்த மழையில்

(ஒறிஜினல்)

### உஷா சினிமா

162, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (10212)

## 2 ஆவது வருட நினைவு அஞ்சலி



தோற்றம்: 05-09-1930

மறைவு: 29-03-1987

### திரு. இ. கதிரவேலு (அம்மான்) அவர்கள்

காலங்கள் தான் ஓடி மறைந்தாலும், உன் நினைவுகள் என்றும் எம் நெஞ்சை விட்டு அகலா. மாசற்ற சோதியே! எம் வாழ்வின் ஒளிவிளக்கே! நீ மறைந்தாய். ஆனல் எம் நெஞ்சங்களில் நீ வாழ்ந்து கொண்டிருக்கிருய். துப்பாக்கிக் குண்டுகளுக்கு நீ இரையானுய்.

எம் வாழ்வும் மண்ணுகியது. ஆனலும் உன் வழியில் எம் வாழ்வு மலர உன் பலம் எமக்குக்கை கொடுக்கும். உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் உறவினர்கள்.

(10424)

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்

### திருமதி கணபதிப்பிள்ளை நாகம்மா

[ஓய்வு பெற்ற ஆசிரியை அவர்கள்]

### மறைவு 09-04 1988

ஆண்டொன்று போனதென்று ஏங்குகின்றோம்
அன்னையே உமைஎண்ணி வாடுகின்றோம்
தேன்கூடுபோல எம் குடும்பம் தன்னை
நீர் தோள்மீது சுமந்ததையே எண்ணுகின்றோம்
கல்லூரி மாணவர்க்கோ நீர் விடிவெள்ளியானீர்
கற்பினெடு கணவனுக்கு நற்றுணையானீர்
அன்புடனே மக்களை நீர் ஆட்சி செய்தீர்
மருமக்கள் மீதிடமோ அன்பு கொண்டீர்
பெற்றவரைப் போலவே பேரர்கள் தன்னையும்
முற்றிலும் அன்போடு நித்தமும் நீர் சுமந்தீர்
வித்தகியே உத்தமத்தின் மொத்தப் புத்தகமே
நித்தம் நிகரில்லாநின் தாளினிற்கே தாயே
சித்தத்தால் சீர்மலர்கள் தூவி நாங்கள்
நெஞ்சத்தால் நெகிழ்ந்தின்று ஓராண்டுதன்னை
அஞ்சலிப்போம் அர்ச்சிப்போம் அறிந்திடுவீர் நீரே!

இங்ஙனம்:
கணவர், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மயிலணி, சுன்னாகம்.
29-03-1989 (10213)

## சிறுவர் இலக்கியத் திங்கள் இதழ்

### அர்ச்சுன

பல் வர்ணப் படம் முகப்பு அட்டையை அலங்கரிக்க ......

கலாநிதி சபா ஜெயராசா; மயிலங்கூடலூர் பி. நடராசா, கோகிலா மகேந்திரன், குழந்தை. ம. சண்முகலிங்கம், வில்வம் பசுபதி, பொ. சண்முகநாதன், கவிஞர் பஞ்சாட்சரம், பூஜா, ராசி, உதங்கா, எஸ். ஆர் பேரின்பநாயகம் ஆகியோரின் ஆக்கங்கள்

மணமூட்ட .....

### மலரும் பெப்ரவரி இதழ்

இன்றே வாங்கிப் படியுங்கள்.
விலை ரூபா 4/- மட்டும்.
பிரதிகள் பெற உங்கள் பகுதி உதயன் முகவர்களை நாடுங்கள்.

THE EXPRESS INSTITUTE KOPAY
A BOON TO STUDENTS

## O/L DAY CLASS

காலை 8.00 — பி. ப. 1.00

இன்று (புதன்) ஆரம்பம்

★ புதிய / பழைய பாடத்திட்ட மாணவர்களுக்குரிய வகுப்புக்கள்.

★ அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதால் இடத்திற்கு முந்துங்கள்.

[C 2033]

யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

## பதவி வெற்றிடம்

1. **கனிஷ்ட லிகிதர்:**

வயது:- 18 - 35 வருடங்கள் வரை
சம்பளத் திட்டம்:- (302.12)
255/- -460/-
12.50 × 8 - 15 × 7 (படிகள் தவிர)

**தகைமைகள்:**

கூட்டுறவுச் சங்க ஊழியர் தரம் 302. 13 சம்பளத் திட்டத்தில் எழுது வினைஞர் பதவியொன்றில் 2 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது க. பொ. த. (சாதாரணதரம்) கணிதம், தமிழ்மொழி உட்பட 5 பாடங்களில் திறமையான சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியும், கூட்டுறவுச் சங்கமொன்றில் எழுதுவினைஞர் பதவியில் இரண்டு வருடங்களுக்கு குறையாத அனுபவம்

(தமிழ், ஆங்கில தட்டெழுத்தில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.)

2. **சிரேஷ்ட லிகிதர்:**

வயது:- 25 -45 வருடங்கள் வரை.
சம்பளத் திட்டம்:- (302.10)
350/- -615/-
15 × 7 -20 × 8 (படிகள் தவிர)

**தகைமைகள்**

கூட்டுறவுச் சங்க ஊழியர் 11ஆம் சம்பளத்திட்டத்தில் கணக்குப் பதவியாளர்/ எழுதுவினைஞர் பதவியொன்றில் 2 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுச் சங்க ஊழியர் 12ஆம் சம்பளத் திட்டத்தில் எழுதுவினைஞர் பதவியொன்றில் 4 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது,

ஐக்கிய இராச்சிய கணக்குப் பதவியாளர் நிறுவன மத்திய பரீட்சையில் சித்தி அல்லது,

கூட்டுறவுச் சங்க ஊழியர் [உயர்தரம்] சான்றிதழ்/ க. பொ. த. [உயர்தரம்] மூன்று பாடங்களில் சித்தி அல்லது,

அரசாங்கம், கூட்டுத்தாபனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறையில் 15 வருடங்களுக்குக் குறையாமல் எழுதுவினைஞராகக் கடமையாற்றியவர்கள் நல்ல திடகாத்திரமான தேக ஆரோக்கிய நிலையில் உள்ளவர்களும் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றுவதற்கு விண்ணப்பிக்கலாம். இவர்களுக்கு வயது எல்லை கவனிக்கப்படமாட்டாது.

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி ஆங்கிலம், தமிழில் கடிதத் தொடர்புகள். அறிக்கைகள் முதலியவற்றை சுயமாகத் தயாரித்து தட்டச்சு செய்யக்கூடியவராகவும், காரியாலயத்தைத் திறம்பட நிர்வகிக்கக்கூடிய வல்லமையும் இருத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் சுயமாகத் தயாரித்து பிறப்பு, கல்வி, அனுபவச் சான்றிதழ் ஆகியவற்றின் போட்டோ பிரதியுடன் 15-04 89ஆம் திகதிகு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

பொது முகாமையாளர்,
யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய்

[C/1580]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைகளில் பால்

# பரீட்சார்த்தத் திட்டம் 3 வாரங்களுக்கு அமுல்

வவுனியா, மார்ச் 29

வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் சிறுவர்களுக்கு மதிய உணவாக பால் வழங்குவது தொடர்பான பரீட்சார்த்தத் திட்டம் இம் மாகாணத்தின் சகல மாவட்டங்களிலும் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை ஒன்றில் மூன்று வாரங்களுக்கு நடைமுறைப்படுத்தப்படும்.

வவுனியா மாவட்டத்தில் நெளுக்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை இப் பரீட்சார்த்த திட்டத்துக்கெனத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இத் திட்டத்திற்கு இங்கு பொறுப்பாகவுள்ள கால்நடை வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி ஞா. சிவபாதசுந்தரம் இதனைத் தெரிவித்தார்.

இக்கிராமப் பகுதியில் உள்ள விவசாயிகளிடமிருந்தும் கால்நடை வளர்ப்பாளர்களிடமிருந்தும் ஒரு லீற்றர் பாலை 6 ரூபா வீதம் பாடசாலை அபிவிருத்திச்சபை கொள்வனவு செய்து பாடசாலைச் சிறுவர்களுக்கு விநியோகிக்கும்.

இம் மூன்று வார கால பரீட்சார்த்த திட்ட அறிக்கையின் உதவியோடும், கால்நடை வைத்தியப் பகுதியினரின் ஒத்துழைப்போடும், மே மாதத்திலிருந்து இத் திட்டம் கல்விப் பகுதியினரால் அமுல் படுத்தப்படவுள்ளது. (க-164)

## மாணவருக்கு பாராட்டு விழா

மாங்குளம், மார்ச். 29

முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து இந்த ஆண்டு பல்கலைக் கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவ மாணவிகளையும் பட்டம் பெற்ற மாணவன் திரு. கா. மோகனராஜாவையும் கௌரவிக்கும் முகமாக முல்லைத்தீவு இளைஞர் முன்னேற்ற மன்றத்தின் கல்வி, கலாசாரப் பிரிவினர் விழா ஒன்றை நடத்தினர்.

முல்லைத்தீவு றோ. க. பாடசாலையில்விழா நடைபெற்றது.

முதன்மை விருந்தினராக முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. கே. பொன்னம்பலமும் சிறப்பு விருந்தினராக முல்லைத்தீவு பிரதேசக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி செல்வி கீர்த்திசிரோன்மணியும் மற்றும் பலரும் கலந்து கொண்டனர்

(இ- 94)

# பாடத்திட்டங்களை மாற்றும்போது அதிகாரிகள் ஆலோசனை பெறப்படும்

## கல்வி மந்திரி தகவல்

யாழ்ப்பாணம், மார்ச் 29

பாடத்திட்டங்களை மாற்றி அமைக்கும்போதும், கல்வித் துறையில் அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படும் போதும் உயர்மட்ட அதிகாரிகளிடம் ஆலோசனைகள் பெறப்படும்.

இந்த ஆலோசனை பிரதேச மட்டத்திலும், மாகாணசபைகள் மட்டத்திலும் மேற்கொள்ளப்படும்.

இந்தத் தகவலைக் கல்வி கலாசார தகவல்துறை அமைச்சர் திரு. டபிள்யூ. ஜே. எம். லொக்குபண்டார தெரிவித்தார்.

மாகாண சபைகளுக்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளர்கள், மேலதிக கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோருக்கான கலந்துரையாடல் ஒன்று அண்மையில் கொழும்பில் கல்வி அமைச்சில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றிய போதே அமைச்சர் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

பிரஸ்தாப கலந்துரையாடலுக்கு கல்வித் துணை அமைச்சர் திருமதி சுனேத்ரா ரணசிங்காவும் சமுகம் அளித்திருந்தார்.

கல்வி அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும் மொழிகளிலும் மாணவர்களும், ஆசிரியர்களும் அறிவை வளர்க்க ஆவன செய்யப்பட வேண்டும்.

சிங்கள மாணவர்கள் தமிழ் மொழியின் ஆரம்ப எழுத்துக்களையாவது கற்றுக்கொள்ள வேண்டும். இதுகுறித்து ஆசிரியர்களை கல்விப்பணிப்பாளர்கள் கண்காணிக்கவேண்டும். ஆங்கிலத்தை முதன்மொழியாகக்கொண்டுகல்விகற்கும்மாணவர்களுக்கும் தனியான ஆங்கிலப் பாடத்திட்டம் தொடர்பாக ஆராயப்படவேண்டும். (அ-9)

# உடல், உள்ளம் வலிமை பெற விளையாட்டுப் போட்டி அவசியம்

மானிப்பாய், மார்ச். 29

இன்றைய கால நிலையில் விளையாட்டுப் போட்டிகள் அவசியம்தானு என்று பலரும் எண்ணலாம். இன்றுதான் விளையாட்டு போட்டிகள் மிக அவசியமானவை. இன்றைய இளைஞர்கள் உடல், உள்ளம் வலிமை பெற்றவர்களாக இருக்க வேண்டும். அதற்கு விளையாட்டுக்கள் அவசியமானவை.

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்கள கல்விஅதிகாரி திரு. சி. புலேந்திரன் உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகளில் பிரதம விருந்தினராககலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

இல்ல விளையாட்டுக்கள் வித்தியாலய அதிபர் திரு. வை. யோகீஸ்வரன் தலைமையில் நடைபெற்றன

வித்தியாசாலையின் முன்ஞள் அதிபர் திரு. வே. கந்தையா மங்கள விளக்கேற்றிஞர்.

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க யாழ். மாவட்ட முன்ஞள் செயலாளர் திரு. சி. சிவபாலசிங்கம் பாடசாலைக் கொடியை ஏற்றிவைத்தார்.

கல்வி அதிகாரி திரு. புலேந்திரன் தமது உரையில் மேலும் கூறியதாவது:

விளையாட்டுப் போட்டிகள் மூலம் வீரம், விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு போன்றவற்றை வளர்த்துக்கொள்ள முடியும்.

விளையாட்டில் வெற்றி, தோல்வி முக்கியமானதல்ல. விளையாட்டில் பங்கேற்கும் மனப்பாங்கு எல்லோருக்கும் ஏற்பட வேண்டும்

அதில் பங்களிப்பதே வெற்றியின் ஆரம்ப நிலையாகும்.

பெரியஒலிம்பிக் விளையாட்டு வீரர்களாக அல்ல; எம் மத்தியில் சிறந்த விளையாட்டு வீரர்களாக நீங்கள் விளங்கிஞல் அதுவே சிறப்புடையதாக அமையும்.

இப்படி அவர் கூறிஞர்.

உடற்கல்வி கல்விஅதிகாரி திரு. த. அருணகிரிராசா சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிஞர்.

விளையாட்டு முடிவில் கார்த்திகேசு இல்லம் (பச்சை) முதலிடத்தைப்பெற்று சாம்பியன் கேடயத்தை பெற்றுக்கொண்டது.

வெற்றிபெற்றவர்களுக்கு கல்வி அதிகாரி திரு. சி. புலேந்திரன் பரிசுகளை வழங்கிஞர். (ச-90)

## அதிபர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் 1984ஆம் ஆண்டில் இருந்து முறைசாராக் கல்விப் பிரிவில் கற்று வெளியேறிய மாணவர்களை 29ஆம் திகதி புதன்கிழமை 9-00 மணிக்கு கல்லூரியில் சமுகம் அளிக்குமாறு அதிபர் கேட்டுள்ளார். எனத் தெரிவிக்கப்படுகிறது. (க)

## நிவாரணப்பணம்

முல்லைத்தீவு மணற்குடியிருப்பு, உடையார்கட்டு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 600 குடும்பங்களுக்கு முல்லைத்தீவு இலங்கை வங்கிக் கிளையில் புனர்வாழ்வு புனரமைப்பு நிவாரணம் ரூபா 4000 வழங்கப்பட்டுள்ளது:

தொடர்ந்து நிவாரணம் வழங்கவுள்ளதாக பதில் முகாமையாளர் திரு. என், இராசேந்திரா தெரிவித்துள்ளார்ா [க-92]

# வடக்கு-கிழக்கு மாகாண விளையாட்டுவிழா ஜுனில்

யாழ்ப்பாணம் மார்ச் 29

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் கல்வி கலாசார விளையாட்டு அமைச்சு ஜுன் மாதம் 1ஆம் திகதி தொடக்கம் 15ஆம் திகதிவரை விளையாட்டு விழா ஒன்றை நடத்த முடிவு செய்துள்ளது.

விளையாட்டு அமைச்சின் பணிப்பாளர் திரு. எஸ்.மரியதாஸ் விளையாட்டு விழாவுக்கான ஆயத்தங்களைச் செய்து வருகிருர்.

விழாவுக்கான முதற்கட்டப் போட்டிகளை உதவி அரசாங்க அதிபர் மட்டத்தில் ஏப்ரல் மாத இறுதிக்குள் நடத்தி முடிக்குமாறு சகல பிரிவுகளின் விளையாட்டு உத்தியோகத்தர்களும் பணிக்கப்பட்டுள்ளனர்.

உதவி அரசாங்க அதிபர் மட்டத்தில் வெற்றிபெற்றவர்கள் மாவட்டப் போட்டிகளில் பங்குபற்றத் தகுதி உடையவர்கள் ஆவர். மாவட்டப் போட்டிகள் யாவும் ஏப்ரல் மாத முடிவுக்குள் நடத்தி முடிக்கப்பட வேண்டும்.

எட்டு மாவட்டங்களில் மாவட்ட விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும். கரபந்தாட்டப் போட்டிகள் மட்டக்களப்பிலும், வலைபந்தாட்டம், ஹொக்கி போட்டிகள் யாழ்ப்பாணத்திலும்—

கரபந்தாட்ட எல்லே விளையாட்டுக்கள் வவுனியாவிலும—

உதைபந்தாட்டப் போட்டிகள் உட்பட ஏனைய சகல சுவட்டு மைதான விளையாட்டுப் போட்டிகள் திருகோணமலையிலும்— நடைபெறும்.

சுமார் 1500 விளையாட்டு வீரர்களும் வீராங்கனைகளும் இம் மாகாண விளையாட்டு விழாவில் பங்குபற்றுவார்கள் என எதிர்பார்க்சப்படுகிறது. (ச)

## ஆயுள்வேத ஆஸ்பத்திரி மூடப்பட்டது

புதுக்குடியிருப்பு, மார்ச் 29

புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் ஒலுமடு உப அலுவலக ஆயுள்வேத வைத்திய சாலை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

வைத்திய அதிகாரி ஒட்டுசுட்டான் உப அலுவலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

ஒலுமடு உப அலுவலகத்தில் இராணுவமுகாம் அமைக்கப்பட்டதை அடுத்தே உப அலுவலகம் தற்காலிகமாக மூடப்பட்டது. [ச-126]

## நீர்வேலி ப.நோ.கூ. சங்க புனரமைப்பு

கோப்பாய், மார்ச் 29

அசம்பாவிதங்களின்போது நஷ்டம் அடைந்த நீர்வேலி ப. நோ. கூ. சங்கத்திற்கு அரசாங்கம் அளிக்க இருக்கும் புனரமைப்பு நிலையத்தினூடாக அழிந்துபோன கட்டடங்களைப் புனரமைக்கவும், புதிய வாகனங்களை வாங்கவும் நீர்வேலி ப. நோ. கூட்டுறவுச் சங்கம் முடிவு செய்துள்ளது. [ச-72]

## கணேசபுரத்தில் ஐ.நா.கூ. சங்கம்

கணேசபுரத்தில் ஐக்கிய நாணய சிக்கனக் கூட்டுறவுச் சங்கம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

மாவட்ட சமாஜத் தலைவர் திரு. வி. தர்மலிங்கம் 'சிக்கனக் கடன்' பற்றி உரையாற்றிஞர்.

திருமதி க. யோகரத்தினம் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். (ச-163)


**ஜெய்ப்பூர் செயற்கை அவயவப் பாவனையாளர் சங்க உதவி திட்ட அமுலாக்க உத்தியோகத்தர் பதவி**

மேற்படிசங்கத்தின் கடன் உதவித்திட்ட அமுலாக்க உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 07 - 04 - 89 வெள்ளிக் கிழமை நண்பகல் 12மணி வரை இல. 5, பழைய பூங்கா வீதியிலுள்ள ஜெய்ப்பூர் அவயவம் பொருத்தும் தொழிற்சாலை அலுவலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பிப்போருக்குப் பின் வரும் தகைமைகள் இருத்தல்வேண்டும்.

1. வயது: 20 - 45 க்குட்பட்டவராகவும்
2. கணிதத்தில் விசேடசித்தியுடன், கல்விப் பொதுத் தராதர (G C. E) உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்களிலாவது சித்தியடைந்தவராகவும்,
3. தமிழிலும், ஆங்கிலத்திலும் தட்டச்சுச் செய்யக் கூடியவராகவும்,
4. வெளிக்கள வேலையில் ஈடுபடக் கூடியவராகவும் இருத்தல்வேண்டும்.

கணக்கியல், நிர்வாக, வெளிக்கள வேலைகளில் நிரம்பிய அனுபவமுடைய, இளைப்பாறிய அரச அலுவலர் மேற்காட்டிய தகைமைகள்சில இல்லாதவராயிருப்பினும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பத்துடன் அண்மையில் பெற்றுக்கொண்ட இரு சான்றிதழ்கள் அனுப்பப்படலாம்.

இப்பதவிக்கு ஆரம்பவேதனம் ரூபா. 1000/- ஆகும். வாழ்க்கைப்படி வழங்கப்பட மாட்டாது. பதவி தற்காலிகமானது. விண்ணப்பங்கள் சீல் வைக்கப்பட்ட மேலுறையின் ''ஜெய்ப்பூர் உதவித் திட்ட அமுலாக்க உத்தியோகத்தர் பதவி'' என இடது பக்க மேல்மூலையில் எழுதப்பட்டு நேரிலோ, பதிவுத் தபாலிலோ அலுவலகத்தில் சேர்க்கப்படலாம்.

ச. பொ. பாலசிங்கம்
தலைவர்
ஜெய்ப்பூர் செயற்கை அவயவப் பாவனையாளர் சங்கம்.

(C/1577



**வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கான இலகுவான நவீன கம்பியூட்டர் பயிற்சி**

**Computer Programming in dbase III+**

ஆரம்பம்: 2 4. 89 (சனி, ஞாயிறு வகுப்புகள்)
கட்டணம்: 1250/- (பகுதி பகுதியாகச் செலுத்தலாம்)
பயிற்சிக்காலம்: 2 மாதம்.

O/L படித்த இருபாலாரும் சேரலாம். கூடியநேர செய்முறைப் பயிற்சி குளிரூட்டப்பட்ட அறையில் (I. B. M. COMPATIBLE) கம்பியூட்டரில் வழங்கப்படும். பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

குறிப்பிட்ட தொகை மாணவ மாணவிகளே சேர்க்கப்படுவார்கள். ஆகையால் விண்ணப்பப்படிவத்தைப் பெற்று பதிவு செய்து கொள்ளவும்.

விண்ணப்ப முடிவு நாள்: 01 - 04 - 89




**UNIKCO COMPUTER CENTRE,**
No. 5, POWER HOUSE ROAD,
2nd LANE, JAFFNA
( Near Sup - Post Office )



பி. வி. சி. குழாய்கள் வாங்கும்போது
**S-Lon எஸ் லோன் என்று கேட்டு**
பார்த்து, உறுதிப்படுத்தி வாங்குங்கள்




உறுதிக்கும் நீண்டகாலப் பாவிப்புக்கும்
உகந்த பி.வி.சி. குழாய்கள் எஸ் லோன் குழாய்களே
மின்னுவதெல்லாம் பொன்னல்ல
எஸ் லோன் குழாய்களின் தரத்திற்கு வேறெவையும் நிகர

S-Lon Lanka (Pvt) Ltd.
487, UNION PLACE, COLOMBO - 2. T'PHONE: 588206 — 93718 - 9


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயங்கள் அருள் ஒளி பரப்பி அமைதியைத் தருகின்றன

## திருப்பணிச்சபைக்கூட்டத்தில் பேச்சு

யாழ்ப்பாணம், மார்ச் 29

'இன்று நிம்மதியற்று வாழ்ந்துகொண்டிருக்கும் மக்கள் மத்தியில் ஆலயங்கள் மக்களுக்கு அருள்ஒளிபரப்பி அமைதியைத் தருகின்றன. எமது ஆலயங்கள் இருளை அகற்றி இம்மைக்கும் மறுமைக்கும் அருள்பாலிக்க வைக்க நாம் ஆவன செய்யவேண்டும்'.

கோப்பாய் தெற்கு அத்தித் தோட்டத்து பரமேஸ்வரி அம்பாள் ஆலய திருப்பணிச் சபையின் விசேட பொதுக்கூட்டத்தில் உரையாற்றும்பொழுது 'சமூக இரத்தினம்' எம். கே. இளையப்பு மேற்கண்டவாறு கூறினார்.

திருப்பணிச்சபைத் தலைவர் திரு. கே. செல்வவிநாயகம் கூட்டத்துக்குத் தலைமைவகித்தார்.

அம்பாள் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்வதற்காக உருவாக்கப்பட்ட அம்பாளின் விக்கிரகத்துக்குரிய செலவைத் திரு. செல்வவிநாயகம் ஏற்றுக்கொள்வதாக இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

மே மாதத்தில் மகாகும்பாபிஷேகத்தை நடத்துவது எனச் சபையில் முடிவு செய்யப்பட்டது. [ச]

## நோயாளர் அவதி

காங்கேசன்துறை, மார்ச் 29

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் நீர் விநியோகம் சீரின்மையால் நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வைத்தியசாலை விடுதிகளில் உள்ள நீர் விநியோகக் குழாய்கள் உடைந்தும், பழுதடைந்தும் உள்ளதால் நீர் விநியோகம் தடைப்பட்டுள்ளதாக நோயாளர்கள் கூறுகின்றனர்.


## லிபியா - வேலைவாய்ப்பு

1. எலெக்ரிசன்
2, கெவி எக்கிப்மென்ற் மெக்கானிக்ஸ்

(Heavy Equipment Plants)
Bulldozer, Crane, Grader Exavator போன்றவை

சம்பளம் 9,000 — 10,000
2 வருட ஒப்பந்தம்

லீவு, ஓவர்ரைம், இன்ஸ்சூரன்ஸ், லிபியா சட்டங்களுக்கு அமைய இருப்பிட வசதி, மெஸ் வசதி, மருத்துவ வசதி இனும்.

வயது 25 - 50 வரை

தயவு செய்து பாஸ்போட், 4 படங்கள், சான்றிதழ்கள் ஆகியவற்றுடன்
03 - 04 - 89 இற்கு முன்பு நேரில் வரவும்.
● முதல் வருபவர்களுக்கு முதலிடம்

ந. பாஸ்கரன் J. P.
**இந்திராணி ஏஜென்சி**
யாழ் வீதி, நெல்லியடி,
கரவெட்டி.
(மொடேர்ண் எடியூகேசன் சென்ரர் முன்பாக)
[10421]


### மக்கள் முகம்

## செஞ்சிலுவைச் சங்க நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 29

அண்மையில் நடைபெற்ற இலங்கை செஞ்சிலுவைச் சங்க வட பகுதிப் பிரிவின் பொதுக் கூட்டத்தில் பின்வருவோர் நடப்பாண்டு உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் — டாக்டர் தெய்வேந்திரன், செயலாளர் — திரு. ச. சிவானந்தராஜா, உப-தலைவர் — திருமதி தி. சண்முகலிங்கம், பொருளாளர் — திரு. க. பாலசுப்பிரமணியம்.

நிர்வாக சபை உறுப்பினர்கள் — வண. மைக்கல் சாமி அடிகள், டாக்டர் ஆர். கணேசமூர்த்தி, செல்வி எல். தேவா, திரு. எஸ். செல்வராசன், திரு. என். குகராஜ், திரு. என். நகுல்ராஜ், திரு. ஜே. ஜீ. ராஜேந்திரன், திரு. எம். செல்வராஜா, திரு. கே. கிட்ணர், டாக்டர் பாலசுப்பிரமணியம், திரு. ஜே. சிவமனோகரன். [க-9]

## மீனவர் அமைப்பு

நெடுந்தீவு மார்ச் 29

நெடுந்தீவுகுருகுல ஆழ்கடல் மீனவர் கிராமிய கடற்றொழில் சமூக அபிவிருத்தி அமைப்பின் நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்,

தலைவர் திரு. அ சின்னப்பு உபதலைவர் திரு. அ. மரியநாயகம் ,செயலாளர் திரு.ம. இராசநாயகம்,உபசெயலாளர் திரு. செ. செபஸ்ரியாம்பிள்ளை பொருளாளர்திரு.இ.அன்ரனி மதுரநாயகம். (ச-111)

## கல்வயல் முருகபதி ஆச்சிரமம்

யாழ்ப்பாணம், மார்ச். 29

சாவகச்சேரி கல்வயல் முருகபதி ஆச்சிரம நடப்பு வருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்:- திரு. எஸ். விஞசித்தம்பி, உப - தலைவர்:- திரு. பி. சந்திரசேகரம், செயலாளர்:- திருமதி பூமணி இராஜரத்தினம், உப- செயலாளர்:- திருமதி மோகனும்பிகை கணேஷ், பொருளாளர்; திரு. முத்தையா, உப-பொருளாளர்:- திரு. இராஜரத்தினம்,

# புனர்வாழ்வு - இளைஞர் அபிவிருத்தி குறித்து வடக்கு-கிழக்கு இளைஞர் கலந்துரையாடுவர்

## யொவன்புர முகாம் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 29

வடக்கு கிழக்கு மாகாணத்தில் இருந்து யொவன்புர நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த இளைஞர்கள் தமது பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய இளைஞர் அபிவிருத்தி நடவடிக்கைகள், புனர்வாழ்வு விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடி வடக்கு கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. வரதராஜப் பெருமாளிடம் அறிக்கை சமர்ப்பிப்பார்கள்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்துடன் இணைந்து செயற்படும் ஸ்ரீலங்கா இளைஞர்கழக சம்மேளத்தினால் வருடாந்தம் நடத்தப்படும் இந்த யொவன்புர இளைஞர் முகாம் இன்று 29 ஆம் திகதி முதல் ஏப்ரல் 2 ஆம் திகதிவரை மகாவலி 'சீ' பிரிவின் கீழ் வரும் கிராந்துருக் கோட்டையில் நடைபெறும்.

ஜனாதிபதி திரு. ஆர் பிரேமதாசாவின் வறுமை ஒழிப்புத் திட்டத்தின் கீழான 'ஜனசக்தி' செயல்திட்டத்துக்கு இளம் சமுதாயத்தினரின் ஒத்துழைப்பைப்பெற்றுக்கொடுக்கும் நோக்கில் 'ஜனசக்தி செயல்திட்டத்திற்கு இளைஞர்களின் கரங்கள்' என்ற தலைப்பிலேயே இம்முறை யொவன்புர இளைஞர் முகாம் நடைபெறுகின்றன.

வடக்கு - கிழக்கு மலையகம் உட்பட நாட்டின் சகல பகுதிகளிலிருந்தும் 10ஆயிரம் இளைஞர், யுவதிகள் இதில் கலந்து கொள்வார்கள்.

இவர்கள் நாடளாவிய ரீதியில் உள்ள 6ஆயிரம் இளைஞர் கழகங்கள் ஊடாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு ''ஜனசக்தி'' திட்டம், அதன் செயல்பாடுகள் தொடர்பாகவும் மகாவலி துரித அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் வளம் பெற்றுள்ள விவசாயிகளின் சமூக, பொருளாதாரத் துறைகளின் அபிவிருத்திகள் தொடர்பாகவும் அறிவுரைகள் வழங்கப்படும்.

இவர்களுக்குமுகாம் அமைப்பதற்கென கிராந்துரு கோட்டை மகாவலி விளையாட்டு மைதானத்துக்கு முன் உள்ள 30 ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டுள்ளது.

அத்தோடு கடந்த ஆண்டு இறுதியில் கொழும்பில் நடத்தப்படவிருந்த அகில இலங்கை இளைஞர் கழக விளையாட்டு விழாவும் மார்ச் 31ஆம் திகதி கிராந்துரு கோட்டை மகாவலி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

ஏப்ரல் மாதம் முதலாம் திகதி ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாச தலைமையில் இளைஞர் பொதுக்கூட்டம் நடைபெறும்.

இக்கூட்டத்தில் இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. நந்தமெதில், இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சர் திரு. சந்திரா கன்கந்த, விளையாட்டுத்துறை இராஜாங்கஅமைச்சர்டபிள்யூ. ஜீ. ஆரியதாஸ, வடக்கு - கிழக்கு மாகாண அரசின் முதல் அமைச்சர் திரு. வரதராஜப் பெருமாள் உட்பட அமைச்சர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்வார்கள். (இ)


## இந்திய யாத்திரை-சுற்றுலா!

நடைபெறும் திகதி: 18-4-89 முதல் 06-05-89 வரை

சித்திரைப் பூரணையில்
கன்னியாகுமரியில் நீர்த்தமாடல்

முந்துங்கள் இடத்திற்கு -----
ஒரு சில ஆசனங்களே உண்டு -----!

திருச்சி, மதுரை, மட்ருஸ், பெங்களூர், மைசூர், சிதம்பரம், நாகூர், திருப்பதி, கொடைக்கானல் ஊட்டி, அன்னைவேளாங்கண்ணி ஆகிய இடங்களில் உள்ள புகழ்வாய்ந்த தலங்களைத் தரிசிக்கவும் ஆறுபடை வீடுகளைத் தரிசிக்கவும்

இன்றே தொடர்பு கொள்ளுங்கள்;

தலைமைப் பணிமனை:

**துர்க்காதேவி ரூர்ஸ்,**
6, நவீனசந்தை மேல்மாடி,
(மக்கள் வங்கிக்கு அருகாமை)
யாழ்ப்பாணம்.

ஆலோசனைக் கிளைகள்:

- ✶ திரு எஸ். இராமலிங்கம் (ஆசிரியர்) கொழும்பு ஸ்ரோர்ஸ் - பளை
- ✶ திரு. க. கருணாரத்தினம் வூட்லண்ஸ் டி ஹோட்டல் கண்டிவீதி, கிளிநொச்சி.
- ✶ Dr. மகாலிங்கம், அரவிந்தன் டிஸ்பென்சரி, கண்டி வீதி. மாங்குளம்.
- ✶ திரு பெ அழகு, 64, இராஜசோதி கபே, கண்டி வீதி,வவுனியா
- ✶ நியூறெயின்போ றவல்ஸ், இல. 15 7/4. சிறீ கதிரேசன் வீதி, கொழும்பு-13

(C/ 2022)


## கண்ணீர் காணிக்கை

யாழ்ப்பாணம் மார்ச் 29

இவ்வாண்டு மார்ச் முதலாம் திகதி பொலன்னறுவையில் குண்டர்களால் கொலை செய்யப்பட்ட கிழக்குப் பல்கலைக்கழக இரண்டாம் வருட விவசாய பீட மாணவன் திரு. கே. என். மணிவண்ணனுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் 'கண்ணீர்க் காணிக்கை'' என்னும் நூலை வெளியிட்டுள்ளனர்.

மணிவண்ணனின் மரணம் குறித்து கடந்த 7ஆம் திகதி முதல் ஒரு வாரம் பல்கலைக்கழகத்தில் ஒரு வாரம் துக்க தினம்அனுஷ்டிக்கப்பட்டது.

அத்துடன் சம்பவத்தைக் கண்டித்து மாணவர்கள் துண்டுப் பிரசுரங்களையும் இரங்கற் கவிதைகளையும் வெளியிட்டனர். (க)

## இலவச தையல் வகுப்பு

குருநகர், மார்ச், 29

படித்த வேலையற்ற வறிய குடும்பங்களைச் சேர்ந்த பெண்களுக்கு இலவச தையல் பயிற்சி வகுப்புகளை நடத்த வடமராட்சி பிரதேச சர்வோதய காரியாலயம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

பயிற்சி வகுப்பில் சேரவிரும்பும் தகுதி உடைய பெண்கள் அந்தந்தப் பிரதேச சர்வோதய உத்தியோகத்தர்களுடன் தொடர்பு கொண்டு விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாமென்று அறிவிக்கப்படுகிறது. (க-51)

## மீண்டும் கொள்ளையர் நடமாட்டம்

யாழ்ப்பாணம் மார்ச் 29

கொக்குவில் மேற்குப் பகுதியில் சனிக்கிழமை இரவும் கொள்ளையர் நடமாடினர் என்று கூறப்படுகிறது.

அப்பகுதி மக்கள் கூச்சலிட்டும் தகரங்களில் தட்டியும் ஓசை எழுப்பினர். (இ-9)


அரசாங்க உத்தியோகஸ்தர்களுக் ான
**இலங்கை நிர்வாக சேவை (S. L. A. S)**
**மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை**

1989 ஜூன் மாதம், 3 ஆம் திகதி நடைபெறவிருக்கும் இப்பரீட்சைக்கான
**விசேட பயிற்சி வகுப்புகள்**
பல தனித்துவம் வாய்ந்த விரைவுரையாளர்களின் இணைந்த சேவை

ஆரம்பம்: 2. 4. 1989 பிற்பகல் 1.00 மணி

பாடநெறி:
கிரகித்தல், நுண்ணறிவு. விடய ஆய்வு

தகைமைகள்:
இலங்கை அரசாங்க சேவையில் 10 வருடங்கள் கடமையாற்றியவர்கள் அல்லது கடமையாற்றும் பட்டதாரிகள் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: 31- 3- 1989
விண்ணப்பப்படிவம் தேவைப்படின் நேரில் தொடர்பு கொள்ளவும்.

- ✶ விரிவுரைகள் சனி, ஞாயிறு விடுமுறை. தினங்களில்
- ✶ கட்டணம் ரூபா 250.00 (முழுப் பயிற்சிக்கும்)
- ✶ இலவச பாடக் குறிப்புகள்.

விபரங்களுக்கு:

**ASTAN INSTITUTE**
166 I Hospital Road. Jaffna.
(A. S. சங்கரப்பிள்ளை கட்டிடம் 1 ஆம் மாடி)
[illegible]


# அனுபூதி வேண்டுமானால் மகான்களை நாடிச் செல்ல வேண்டும்

## யோகர் சுவாமி குருபூசையில் பேச்சு

சாவகச்சேரி, மார்ச் 29

'யோகர் சுவாமிகள் ஒரு ஜீவன்முத்தர் அவருடையகாலத்தில் வாழ்ந்த நாம் எல்லோரும் பாக்கியசாலிகள். வேதாந்த சித்தாந்த அறிவு பெற வேண்டுமானால் அவற்றிற்குரிய சாத்திரங்களைப் படித்து அறிந்து கொள்ளலாம். அனுபூதி வேண்டுமானால் மகான்களை நாடிச் செல்லவேண்டும்.

கல்வயல் சங்கீத ஆச்சிரமத்தில் நடைபெற்ற யோகர் சுவாமிகளது குருபூசையில் உரையாற்றும்பொழுது ஆத்மஜோதி முத்தையா மேற்கண்டவாறு கூறினார்.

திரு. முத்தையா தனதுரையில் மேலும் கூறியதாவது:

யோகர் சுவாமிகள் எவ்வித ஆசைகளும்அற்றஓர்உன்னதத் துறவி. காவி உடையும் ஒரு பந்தம் எனக்கருதியவர். காவி கட்டினால் தான் ஒருசந்நியாசி என்ற எண்ணம் உண்டாகி அகங்காரத்துக்கு ஆள்படநேரிடும் என்றுகருதி வெள்ளாடையே அணிந்தார் எனக் கூறினார். (ச-31)

# ஜனசக்தி திட்டப்பயிற்சி வகுப்பு

மானிப்பாய், மார்ச் 29

ஜனசக்தித் திட்ட அமுலாக்கம் பற்றி அதில் சம்பந்தப்பட்ட சகல வெளிக்கள முகவர்களுக்கும் தெரிவு செய்யப்பட்ட உள்ளக முகவர்களுக்கும் (குடியிருப்புத் தலைவர்கள்) இரண்டுநாள் பயிற்சி வகுப்புக்களை பிரிவு ரீதியாக நடத்த வேண்டும் என உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் பொது நிர்வாக அமைச்சு பணித்துள்ளது.

வலிகாமம் தெற்கு உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வெளிக்கள உள்ளக மாற்ற முகவர்களுக்கான இரு [illegible] மார்ச் மாதம் 31ஆம் திகதியும், ஏப்ரல் மாதம் முதலாம் திகதியும் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும் என உடுவில் உதவி அரசாங்க அதிபர் திரு, ஆ. மகாலிங்கம் அறிவித்துள்ளார்.

இப்பயிற்சி வகுப்புக்கள் திரும்பவும் நடத்தப்படமாட்டாது என்றும் சகல உள்ளக வெளிக்கள முகவர்களையும் இதில் தவறாது கலந்து கொள்ளவேண்டும் என்றும் பயிற்சிகளில் கலந்து கொள்வோருக்கான பிரயாணப் படியும் உணவுப் படியும் வழங்கப்படும் என்றும் அவர் அறிவித்துள்ளார். (ச-90)

## உ ஓராண்டு நினைவஞ்சலி



**செல்வி கமலாதேவி சச்சிதாநந்தம்**
(துர்க்கா)

ஆண்டவன் படைப்பு: 1965-04-07
அநியாய துடைப்பு: 1988-03-22

திதி: 29-03-1989

இனப் பற்று மொழிப்பற்று ஈன்றெடுத்த தாய் தந்தை
உனைப்பற்ற நீ பற்றி உடன்பிறந்தார் தம்மீது
வனப்புடை வாஞ்சை வளர வளர்ந்தவுனை
வினைப் பற்று பற்றி விண்கொண்டு சென்றதுவே!

விண்கொண்டு சென்றாலும் வீரமுறுந் துர்க்காவே
கண்ணே கமலாவெங் கருத்தில் உறைந்து விட்டாய்
எண்ணியோ ராண்டுதான் ஏகி விட்ட போதிலும் நீ
கண்முன்னே நிற்கின்றாய் கலங்கித் தவிக்கின்றோம்.

உமது ஆத்மா சாந்தி உறுவதாக!

அப்பா, அம்மா, தம்பிமார், தங்கைமார்,
அக்கா, அத்தான், பிள்ளைகள்,
அம்மப்பா, அம்மம்மா, அப்பப்பா,
4 ஆம் வட்டாரம், மாமன்மார், மாமிமார்,
மு/புதுக்குடியிருப்பு, உற்றார், உறவினர், ஊரவர்கள்.
29-03-1989

(C/1579)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நாட்டில் ஒரு நாளைக்கு பத்துப்பேர் வீதம் மின்சார விபத்தில் மரணம்

## தொழிற்சாலை விபத்துக்களை தடுக்கவழியாது?

இலங்கையில் ஏறத்தாழ 40,000 தொழிற்சாலைகள் இருக்கின்றன. இவற்றில் அநேகமானவை சிறியனவாக இருந்தாலும் இத்தொழிற்சாலைகளில் பல விபத்துக்கள் ஏற்படுகின்றன. சில விபத்துக்கள் சிறியனவாகவும் சில விபத்துக்கள் பாரதூரமானவையாகவும் இருக்கின்றன. சில விபத்துக்களால் மரணம் சம்பவிப்பதும் உண்டு.

அநேக தொழிற்சாலைகள் இயந்திரங்கள் மூலம் இயக்கப்படுகின்றன. இயந்திரங்களின் அசையும் பாகங்களினால் அநேகமான விபத்துக்கள் ஏற்படுகின்றன. தொழிலாளரின் பாதுகாப்பற்ற செயலினாலும் பல விபத்துக்கள் ஏற்படுகின்றன.

தொழில் திணைக்களத்தின் கீழ் தொழிற்சாலைகள் பிரிவு என்று ஒரு பகுதி உண்டு. இப்பிரிவு தொழிற்சாலைகளும், தொழிலாளர்களும் சம்பந்தப்பட்ட விஷயங்களை கையாளுகிறது. 1942 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் பிரிவுச்சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டம் தொழிலாளரின் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் அவர்களின் நலனை பாதுகாக்க வகை செய்கிறது.

தொழிற்சாலைகளில் நடைபெறும் விபத்துக்களில் 98சதவீதமானவை தொழிலாளரின் பாதுகாப்பற்ற செயல்களா அல்லது பாதுகாப்பற்ற இயந்திரங்களினால், அல்லது பாதுகாப்பற்ற சுற்றுடலினால் ஏற்படுகின்றன. பயிற்சி அனுபவம் இல்லாமல் அல்லது அதிகாரம் இல்லாமல் இயந்திரங்களில் வேலை செய்தல், அதிவேகமாக இயந்திரங்களை இயக்குதல் அதிக பாரம் ஏற்றுதல், வேலைத்தளத்தில் தொழிலாளரின் கவனத்தை திசை திருப்பும் வகையில் மற்றைய தொழிலாளர் நடத்தல் பாதுகாப்பு உபசரணங்களை அணியாமை போன்றவை சில பாதுகாப்பற்ற செயல்கள்.

அதேபோல பாதுகாப்பற்ற இயந்திரங்கள் முற்றுகஅல்லது சரியாக காவலிடப்படாத இயந்திரங்கள், பழுதடைந்த ஆயுதங்கள், பழுதடைந்த பொருள்கள், பாதுகாப்பற்ற சுற்றுடல்கள், குறைவான வெளிச்சம், நச்சு வாயு கொண்ட அசுத்தமான காற்று, பாதுகாப்பற்ற உடை என்பவற்றையும் பாதுகாப்பற்ற செயல்கள் என்று கூறலாம். தொழிற்சாலை விபத்துக்களை எப்படித் தடுக்கலாம்?

மேற்கூறியவற்றை பாதுகாப்பானவை ஆக்கவேண்டும். தொழிலாளரைப் பாதுகாப்பான முறைகளில் பயிற்றுவிக்க வேண்டும். பாதுகாப்பான இயந்திரங்களை அமைக்க வேண்டும்; அசையும் ஆபத்தான பகுதிகளை மூடிவிட்டு காவலிட்டு வைக்க வேண்டும்; பாதுகாப்பான சுற்றுடலை அமைக்க வேண்டும்.

காற்றோட்டம் இல்லாவிட்டால் வடிவமைப்பு மூலம் காற்றோட்டம் உண்டாக்க வேண்டும். ஒரு தொழிற்சாலையில் ஆகக்குறைந்தது நிமிடத்திற்கு 30 மீற்றர் வேகத்தில் காற்று வீச வேண்டும். இல்லாவிட்டால் செயற்கை முறை மூலம் காற்றோட்டத்தை ஏற்படுத்த வேண்டும்.

தொழிற்சாலை விபத்துக்களில் மின்சாரம் தாக்கி இறப்போர் அதிகம். இலங்கையில் சராசரியாக ஒரு நாளைக்கு 10 பேர் வீதம் மின்சாரம் தாக்கி இறக்கின்றார்கள்.

ஒரு விபத்து நடந்ததும் அது சிறிதாக இருந்தாலும் பெரிதாக இருந்தாலும் தீர விசாரிக்க வேண்டும்.

ஏன் நடந்தது? எப்படி நடந்தது? முன்பு நடந்ததா? பாதுகாப்பற்ற இயந்திரம் காரணமா? பாதுகாப்பற்ற தொழிலாளியின் செயலா?

இந்த வினாக்களை எழுப்பி இத்தகைய விபத்துக்கள் மீண்டும் நடைபெறாமல் இருக்க என்ன செய்ய வேண்டும் என்று தீர்க்கமான முடிவுகளைச் செய்யவேண்டும். இத்தகைய முடிவுகளைச் செவ்வனே நடைமுறைப்படுத்தினால் விபத்துக்கள் ஏற்படாமல் தடுக்கலாம்.

**கே. சுப்பிரமணியம்**
தொழிற்சாலை பரிசோதக பொறியியலாளர், தொழில் திணைக்களம், யாழ்ப்பாணம்.



வறுத்தலைவிளான் புற்றுநோயாளர் விடுதியில் சுவாமி சிதானந்த தியானப் பயிற்சி அளிப்பதைப் படத்தில் காணலாம்.

## மன அமைதியை ஏற்படுத்தும் புற்று நோயாளர் விடுதி

பொது மக்களின் நிதி உதவியுடன் வடமாகாண புற்று நோய் சங்கத்தால் தெல்லிப்பழை வறுத்தலைவிளானில் கட்டப்பட்ட புற்றுநோயாளர் விடுதி ஜனவரி மாத இறுதியில் (27-1-89) சங்கத்தின் உப தலைவரும் சத்திர சிகிச்சை நிபுணருமான வைத்திய கலாநிதி வே. கிருஷ்ணராசாவால் திறந்து வைக்கப்பட்டது.

இந்த விடுதி தெல்லிப்பழை வைத்தியசாலையில், கதிர்வீச்சு சிகிச்சைக்கென அமைக்கப்பட்ட கட்டடத்தை விட வேறான கட்டடமாகும்.

இந்த விடுதி, எந்த சிகிச்சை அளித்தும் புற்றுநோயைக் குணப்படுத்துவது கஷ்டமான நிலையை அடைந்தவர்களும் குணப்படுத்த இயலாதவர்களும் அனுபவிக்கும் கஷ்டங்களை அகற்றி, மன அமைதியை ஏற்படுத்தி பராமரிப்பதை நோக்கமாகக் கொண்ட விடுதியாக அமைகின்றது.

சத்திர சிகிச்சை நிபுணரும் விடுதியில் தங்கியிருக்கும் உப வைத்தியரும் தாதிமார்களும் வேறு ஊழியர்களும் இங்கு கடமையாற்றுகின்றார்கள்.

25, 30 நோயாளிகளை பராமரிக்கத் தக்க வசதிகளைக் கொண்ட விடுதி இது. இங்கு உணவு, மருந்து, கவனிப்பு மூன்றும் இலவசமாக அளிக்கப்படுகின்றது.

கிழக்கு மாகாண நோயாளிகளும் இந்த விடுதியில் அனுமதிக்கப்படுவார்கள். நோயாளிகள் விரும்பி வழங்கும் நிதி உதவி ஏற்கப்படும். நோயாளிகள் விரும்பினால் அவர்களுக்கு மனோதத்துவ போதனையும் தியானப் பயிற்சியும் ஆத்மீக ஆசிர்வாதமும் அளிக்கப்படுகின்றன. இம்முறைகளால் மன அமைதி இலகுவாக ஏற்படுகின்றது.

தொடர்ந்து நிதி உதவியோ, தானியம், காய்கறி, பலசரக்கு உதவியோ அளிக்கும்படியும் தமது உறவினரின் திவச நாட்களில் உணவு தானம் அல்லது வெகுமதி அளிக்கும் படியும் இச்சங்கம் பொது மக்களை வேண்டிக் கொள்வதாக அதன் உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர்

விடுதியில் தங்க விரும்புவோர் தாம் சிகிச்சை பெற்ற நிபுணரிடமிருந்து கடிதத்துடன் அல்லது நேரடியாக வரலாம் என அறிவிக்கப்படுகின்றது. (க)

## ★ வாசகர் திருமுகம் ★

### விலை உயர்வு! நிறைகுறைவு!

உணவுப் பொருள்களின் விநியோகம் வழமைக்கு திரும்பி சீராக நடைபெற்று வருகின்ற போதிலும் உணவுப் பொருள்கள், அத்தியாவசிய பாவனைப்பொருள்களின் விலையைத் தனியார் விற்பனை நிலையங்கள் குறைக்க மனம் இன்றி கூடிய விலையிலே விற்பனை செய்கின்றன.

சீனி கிலோ 23 ரூபா, மா கிலோ 8 ரூபா 50 சதம், மண்ணெண்ணை லீற்றர் 10 ரூபா, பாண் றாத்தல் 3ரூபா 50 சதம்

இதே போன்று பல உணவுப் பொருள்களும் அத்தியாவசிய பாவனைப் பொருள்களும் அதிகரித்த விலையில் விற்பனை செய்யப்படுகின்றன.

அதே நேரம் நிறையும் குறைவான அளவில் வழங்கப்படுகிறது. பாண் கூட சரியான அளவில் இல்லை. பல வியாபார நிலையங்களில் தராசுப்படிகள் கூட தான் தோன்றித்தனமாக பயன்படுத்தப் படுகின்றன.

இறாத்தல் அவுன்சில் நிறுத்து கிலோ அளவில் விற்பனை செய்வது, பல இடங்களில் தேயிலைப் பைக்கற் கல்லு மற்றும் பொருள்கள் படிக்குற்றிகளாகப் பயன்படுத்தப்படுவது ஆகியவற்றைச் சாதாரணமாக காணக் கூடியதாக உள்ளது.

சில இடங்களில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் பொருள்கள் கொள்வனவு செய்து நிறைகுறைவாகவும் கூடிய விலையிலும் விற்பனை செய்யும் நவீன வியாபாரமுறையும் நடைபெறுகிறது.

கலப்படம், நிறை குறைவு, அதிகரித்த விலை என்பன இன்றைய சூழ்நிலையில் பாவனையாளர்களுக்கு மேலதிக நெருக்கடியாக அமைகின்றன.

அச்சுவேலி — அ. ஆதவன்

### பிறவுண் வீதி-கோண்டாவில் சேவை மீண்டும் நடைபெறுமா?

வடபிராந்திய போக்குவரத்து சபைக்கு பல புதிய பஸ் வண்டிகள் கிடைத்தும் பிறவுண் வீதி- கோண்டாவில் (808) இலக்க மார்க்க குறுகிய சேவை ஆரம்பிக்கப்படவில்லை. தினமும் காலை - மத்தியானம் - மாலை ஆகிய மூன்று நேரங்களிலும் அதனை மீண்டும் நடத்தும் படி வேண்டுகின்றேன்.

பாடசாலைப் பிள்ளைகளும், உத்தியோகத்தர்களும் மற்றும் பயணிகளும் நீண்ட தூரம் நடந்து சென்று பிரயாணத்தை மேற்கொள்ளாமல் இந்தக் குறுகிய சேவை பஸ் மூலம் பிரயாணம் செய்ய முடியும்.

கோண்டாவில் — கா. ஸ்ரீபதிநாதன்

### அடையாள அட்டை புதுப்பித்தல்

பத்து வருடங்களுக்கு மேலான அடையாள அட்டைகள் உருக்குலைந்து பொலிவிழந்து இருப்பதனால் அவற்றைப் புதுப்பிக்க வேண்டிய அவசிய சூழ்நிலை நிலவுகிறது. தற்போது வைத்திருக்கும் அடையாள அட்டையைச் சேர்த்து அனுப்பி புதுப்பிக்கலாம் என்ற நடைமுறை சாத்தியமற்றதாகும் என்பதை யாவரும் உணர்வர். பொலீஸ் சான்றிதழ்களைச் சேர்த்து அனுப்புவதென்பது, மக்களுக்குப் பல கஷ்டங்களைத் தருவதொன்றாகும்.

இந்நிலையில், பத்து வருடங்களுக்கு மேற்பட்ட அடையாள அட்டைகளைப் புதுப்பிக்கக் கூடிய இலகுவான நடைமுறையினை, கிராமசேவகர் மட்டத்தில் அறிமுகப்படுத்த வேண்டியது அவசியம். ஆட்பதிவுத்திணைக்களம் ஆவன புரியுமா?

யாழ்ப்பாணம். — கே. எஸ். சிவஞானராஜா

## வலது குறைந்தோருக்கு முச்சக்கர வண்டிக்குப் பதில் கழுதைகள்

ஹராரே, மார்ச். 27

முச்சக்கர வண்டிகள் வேண்டாம் கழுதைகள் அனுப்புங்கள்—

சிம்பாப்வேயில் உள்ள செஞ்சிலுவைச்சங்கம் இந்த வேண்டுகோளை பொது ஸ்தாபனங்களுக்கு விடுத்துள்ளது.

வலது குறைந்தவர்களுக்கு உதவும் திட்டம் ஒன்றை இச்சங்கம் தயாரித்துள்ளது. கிராமப்புறங்களில் உள்ள வலது குறைந்தவர்கள் பாவிக்க முச்சக்கர வண்டிகளைக் கொடுத்து உதவ பல பொது நலஸ்தாபனங்கள் முன்வந்துள்ளன.

அவற்றிற்கு விடுத்துள்ள வேண்டுகோளில்—

கிராமப்புறங்களில் உள்ள வலது குறைந்தவர்கள் பாவிக்க கழுதைகள் தான் நல்லது. அவற்றைத் திருத்த வேண்டிய தேவை ஏற்படாது. முச்சக்கர வண்டிகள் பழுதடைந்தால் திருத்த வேண்டி உள்ளது— என்று சிம்பாப்வே செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

ஒரு கழுதையின் விலை 15 சிம்பாப்வே டொலர் ஆகும். இது முச்சக்கர வண்டியின் விலையில் 10 இல் ஒரு பங்காகும். (எ)

# நேர்மை உள்ளம் படைத்த போராட்டத்தலைவர் நாகரத்தினம்

ஒடுக்கப்பட்ட மக்கள் இன்று அனுபவிக்கும் ஜனநாயக உரிமைகளுக்காகத் தன்னை அர்ப்பணித்து, தனது செல்வத்தின் பெரும்பகுதியைச் செலவு செய்து, எவ்வித ஆடம்பரமும், சலசலப்புமின்றி, வாழ்ந்த எஸ். ரி. என். நாகரத்தினத்தின் மறைவு அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஒரு பேரிழப்பாகும். 1927 ஆம் ஆண்டு மாசி மாதம் பத்தொன்பதாம் திகதி பிறந்த நாகரத்தினம் தமது கல்லூரிப் படிப்பை முடித்துக்கொண்டு, சிறிது காலம் கொழும்பிலுள்ள தனியார் நிறுவனமொன்றில் வேலைசெய்துவிட்டு, அங்கிருந்து விலகி தமது தந்தையார் மேற்கொண்ட வியாபாரத்தைப் பொறுப்பேற்று சிறப்புற நடத்தி வந்தார்.

இக்கால கட்டத்தில் ஒடுக்கப்பட்ட மக்களின் மேம்பாட்டிற்காகவும், விடுதலைக்காகவும் செயலாற்றி வந்த ஸ்தாபனங்களோடு நெருக்கமான தொடர்பு வைத்திருந்த நாகரத்தினம் தேசிய ரீதியாக கம்யூனிஸ்ட் கட்சியுடன் நெருக்கமான உறவையும் கொண்டிருந்தார், இதன் பயனாக அக்காலகட்டத்தில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட திரு. வ. பொன்னம்பலம் அவர்களுக்குப் பக்கபலமாக நின்று செயலாற்றினார். இவ்வுறவுகளின் அடிப்படையில் திரு. நாகரத்தினம் 1957ஆம் ஆண்டு சோவியத் நாட்டிற்கும் விஜயம் செய்தார்.

1960 ஆம் ஆண்டுகள் எமது நாடும், மக்களும் புதிய அரசியல் சிந்தனைகளால் கவர்ந்திழுக்கப்பட்ட காலமாகும். இளைஞர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள் உணர்வுபூர்வமாக எழுச்சியுற்றகாலம்.

இக்கால கட்டத்தில்தான் சாதியின் பெயரால் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வில் ஒரு திருப்பு முனையாகவும், முழுத்தமிழ் பேசும் மக்களின் எழுச்சிக்கு முன்னோடியாகவும் அமைந்த ஒக்டோபர் எழுச்சி உருவானது. 1966 ஆம் ஆண்டு ஒக்டோபர் 21 ஆம் திகதி சுன்னாகம் சந்தை மைதானத்திலிருந்து பல ஆயிரக்கணக்கான மக்கள் அணிதிரண்டு, சாதியமைப்பு நகரட்டும், சமத்துவ நீதி ஓங்கட்டும்'' எனும் கோஷத்தை முன்வைத்து ஊர்வலமாக யாழ்ப்பாண நகரை நோக்கி முன்செல்ல முயன்ற சமயம் பொலீஸாரால் ஊர்வலம் தடுத்துநிறுத்தப்பட்டது தடையையும் மீறி ஆவேசமாகப் புறப்பட்ட ஊர்வலத்தை பொலீஸார் குண்டாந்தடிகளால் தாக்கினர்.

இவ்வூர்வலத்துக்குத் தலைமைவகித்து பொலீஸாரின் தாக்குதலுக்கு இலக்காகியவர்களில் நாகரத்தினமும் ஒருவர்.

இச்சம்பவம் நிகழ்ந்து இரு வாரங்களின் பின்னர் ஊர்வலத்தடையை [illegible] தாக்குதலையும் கண்டித்து மீண்டும் அதே சுன்னாகம் சந்தை மைதானத்திலிருந்து பிரமாண்டமான ஆரப்பாட்ட ஊர்வலம் ஒழுங்கு செய்யப்பட்டது. அதில் பல பத்தாயிரக் கணக்கில் யாழ்ப்பாணத்தின் மூலை முடுக்கெல்லாமிருந்து ஒடுக்கப்பட்ட மக்கள் வந்து கலந்து கொண்டார்கள், அன்றுமாலை மாபெரும் பொதுக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. இச்சம்பவங்களால் ஆகர்சிக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்கள் உணர்வு பூர்வமாக செயல்படத்தொடங்கினர்.

இவர்கள் மத்தியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டு தான் யாழ். மாநகர சபை மண்டபத்தில் நடைபெற்ற மாநாட்டில் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.



எஸ்.ரி.என். நாகரத்தினம்

இதன் தலைவராக எஸ். ரி. என். நாகரத்தினம் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தேனீர்க்கடை, ஆலயப்பிரவேசம் என்பவற்றிற்கு வெகுஜன இயக்கத்தின்மூலம் அறைகூவல் விடுக்கப்பட்ட சமயம் எஸ். ரி. என். அப்பேரியக்கத்தை மிகுந்த நிதானத்துடன் தலைமைவகித்து வழிநடத்தினர். சங்கானை, சாவகச்சேரி கொடிகாமம், உடுப்பிட்டி உரும்பராய்காங்கேசன்துறை. நெல்லியடி, கன்பொல்லை, அச்சுவேலி போன்ற பகுதிகளில் தேநீர்கடைப் பிரவேசம் நடைபெற்றது. ஆலயப் பிரவேசம் மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன் கோயில், சன்னதி முருகன் ஆலயம், வல்லிபுர ஆழ்வார் ஆலயம், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் ஆகியவற்றில் இடம் பெற்றது.

தலைவர் நாகரத்தினத்தின் மதிநுட்பத்திலும், அவரது நேர்மையான வழிகாட்டலிலும் மக்கள் வைத்த நம்பிக்கை காரணமாக, நெருக்கடிகள் தொடரத் தொடர, போராட்டம் புதிய வீச்சுடன் பல்வேறு வெற்றிகளை ஈட்டி, முன்சென்று கொண்டேயிருந்தது.

சமூக ஒடுக்கு முறைகளுக்கெதிரான விடுதலைப்போராட்[illegible] பெரும் தாக்கத்தை உருவாக்க [illegible] யார்கள், ஒடுக்கப்பட்ட மக்களின் இருப்பிடங்களை விட்டு வெளியேற்றவும், வீடுகளை தீயிடவும்கூட அச்சமயம் தயங்கவில்லை. ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டத்தை நசுக்க முற்பட்டவர்கள், சண்டியர்களை உள்ளடக்கிய குண்டர் படையை ஆயுதங்கள் சகிதம் உருவாக்கினார்கள். இந்நிலையில் போராடும் மக்கள் தங்களை தற்காத்துக் கொள்ளவும், எதிரிகளை முறியடிக்கவும் சில தற்காப்பு வழிமுறைகளைப் பின்பற்றவும் வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அன்று ஒடுக்கப்பட்ட மக்கள் தாங்கள் வாழும் கிராமங்களில் இளைஞர் குழுக்களை அமைத்து ஆயுதம் தாங்கிய எதிரிகள் தங்கள் கிராமங்களில் நுழைய முடியாதவாறு தற்காப்பு அரண்களை அமைத்து இரவு பகலாக தமது மக்களைப் பாதுகாத்தனர். இத்தகைய நெருக்கடியான நேரத்தில், குறிப்பாக வடபகுதியைப் பொறுத்தவரை என்றைக்குமில்லாதவாறு ஒடுக்கப்பட்ட மக்கள் ஓரணியில் திரண்டிருந்த அன்றைய காலகட்டத்தில் தைரியமாக நின்று இம்மக்களுக்கு தலைமை வகித்து வழிநடத்தியவர் எஸ். ரி. என். நாகரத்தினம் அவர்கள். ஒடுக்கப்பட்ட மக்கள் தம்மீது திணிக்கப்பட்ட அடிமை, குடிமை முறைக்கும் சமூக ஒடுக்குமுறைக்கெதிராகவும் ஒரே சமயத்தில் பிற்போக்காளர்களையும், அவர்களுக்கு துணை நின்ற அரசு இயந்திரத்தையும் அதிலும் பிரதானமாக பொலீஸ் படையையும் எதிர்த்து நின்று நடத்திய வீரம் செறிந்த போராட்டம்தான் பிற்காலத்தில் இன ஒடுக்குமுறைக்கெதிரான போராட்டங்களுக்கு முன்னோடியும், வழிகாட்டியுமாகும்.

எஸ். ரி. என். நாகரத்தினம் தலைமைவகித்து ஒடுக்கப்பட்ட மக்களின் ஜனநாயக உரிமைகளுக்கான போராட்ட காலத்தில், அதற்காதரவாக தென்னிலங்கையிலும். நாடாளுமன்றத்திலும், குரல் கொடுத்த எம். பி.யான எஸ். டி. பண்டாரநாயக்காவுடனும் அன்றைய காலகட்டத்தில் இம்மக்களின் போராட்டங்களோடு நெருக்கமான ஈடுபாடு கொண்டிருந்த நா. சண்முகதாசன் அவர்களுடனும், தான் சார்ந்த மக்களின் நலன் கருதி நெருக்கமான தொடர்பு கொண்டிருந்தார்.

மேற்குறிப்பிட்ட இருவரும் 1971ஆம் ஆண்டுக் கிளர்ச்சியின்போது கைது செய்யப்பட்ட சமயம், நாகரத்தினமும், அவருடன் இணைந்து நின்ற அவரது சகாக்களில் பலரும் பொலீசாரால் தேடப்பட்டனர். இந்நேரத்திலும் தலைமறைவாக வாழ்ந்து, மக்களுக்கான கடமைகளை செவ்வனே நிறைவேற்றினார். இது அவரது நெஞ்சுரத்திற்கும், போர்க்குணத்திற்கும் எடுத்துக் காட்டாகவிளங்கியது.

**கே. சுப்பையா**

# மாதத்தில் 42 ஆயிரம் கடிதம் பெற்ற முசோலினி

இரண்டாம் உலகயுத்த காலத்தில் ஐரோப்பிய நாடுகளில் வாழ்ந்த சர்வாதிகாரிகளில் இத்தாலியைச் சேர்ந்த பெனிற்ரோ முசோலினியும் ஒருவர் ஆவர். 1936ஆம் ஆண்டில் இவரைக்கவர்ந்தஇத்தாலியப் பெண்கள் (இவர்களில் நடிகர்கள், பிரபுத்துவ குடும்பங்களைச் சேர்ந்தவர்கள், தொழிற்சாலைத் தொழிலாளர்கள், பரத்தைகளும்கூட) ஒரு மாதத்திற்கு 42,000 கடிதங்கள் இவருக்கு எழுதிவந்தனராம். அக்கடிதங்களில் பெரும்பாலானவை காதல் கடிதங்கள். முசோலினி தனக்கு வரும் கடிதங்கள் அனைத்தையும் அவர்காட்டிய வழிப்படி தரம்பிரித்து வைத்து அவரின் பார்வைக்குச் சமர்ப்பணம் செய்ய ஒரு இரகசியமான காரியாலயமும் வைத்திருந்தாராம்.

அவர்மீது இத்தாலிய பெண்கள் வைத்திருந்த அளவற்ற ஆசையையும் அபிமானத்தையும் அவருக்கு அனுப்பப்பட்ட கடிதங்கள் விளக்குவனவாய் உள்ளன.

1925 ஆம் ஆண்டில் ரஸ்கனியில் இருந்து ஒரு பெண் பின்வருமாறு முசோலினிக்கு எழுதியிருந்தார்: நீங்கள் இங்குவரும்வரை நான் இவ்வுலகில் பற்று அறுந்து சந்தோஷமற்றவளாய் வாழ்ந்தேன். நான் விவாகம் செய்திருந்தும் அன்பு என்பதுஎனக்கு என்னவென்று தெரியாது......

இப்படி ஒருபெண் எழுதியிருந்தாள்.

வயதுபோன பாட்டி ஒருத்தி முசோலினியின் பிறந்த நாளன்று 12பவுண் துண்டுகளை தனது வயலில் கண்டெடுத்தார். அவர் அப்பவுண் துண்டுகளைத் தனக்காக்கவில்லை. இன்று உங்கள் பிறந்ததினம். இன்றைய தினம் நான் கண்டெடுத்த இந்த 12 பவுண் துண்டுகளும் உங்களுக்கே உரியதாகும். நீங்கள் இவற்றை எமது இத்தாலிய நாட்டின் மேம்பாட்டுக்காகச் செலவழிக்கவும்.

பாட்டி 12 பவுண் துண்டுகளையும் கீழ்க்காணும் வசனங்களைக் கொண்ட கடிதம் ஒன்றையும் முசோலினிக்கு அனுப்பி வைத்தார்.

முசோலினியின்பிற்கால வாழ்க்கை வலுவிழந்ததாகவும் ஏமாற்றம் உடையதாகவும் காணப்பட்டது. இவரைப் பாராட்டியவர்கள் இவரின் பரமவிரோதிகளாக மாறினர். இவரின் ''விசிறி'' ஒருவர் இவருக்குமனத்துணிச்சலுடன் எழுதியகடிதம் ஒன்றில், எமது யூதர்கள் சித்திரவதை செய்யப்பட்ட முறை வெட்கக்கேடானது. இதையிட்டு நீங்கள் வெட்கப்படவேண்டும் என்று எழுதியிருந்தார்.

1942ஆம் ஆண்டு நேசநாடுகளின் விமானங்கள் இத்தாலி மீது குண்டுகளைப் பொழிந்த பொழுது பொதுமக்கள் இவரை இரக்கமின்றி விமர்சித்தனர்.

இவர் 1945ஆம் ஆண்டு 62 ஆவது வயதில் டொன்கோ என்ற இடத்தில் கொலை செய்யப்பட்டார். இவருடன் இவரின் ஆசைநாயகியான கிளாரு பெற்றூசியும் இறந்தார். அப்பொழுது ஆசைநாயகிக்கு வயது 33மட்டுமே.

தொகுப்பு: சேனு காணு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஒப்பந்தத்தைச் சீர்குலைக்க இலங்கை அரசு முயற்சிக்கிறது

## ஈ. என். டி. எல். எவ். கண்டனம்

வவுனியா, மார்ச் 29

இலங்கை—இந்திய ஒப்பந்தம் உருவானதற்கும் அதன் பின்னணியில் மாகாண அரசு முறை தோன்றியதற்கும் அடிப்படைக் காரணம் தமிழினத்தின் தேசிய இன விடுதலைப் புரட்சிதான் என்பதை மனதிற் கொண்டு செயற்பட வேண்டியது இலங்கை மத்திய அரசின் கட்டாய கடமையாகும்.

இவ்வாறு ஈ. என். டி. எல். எவ். வட்டாரங்கள் தெரிவித்தன.

அதே வட்டாரங்கள் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

இத்தருணத்தில் மாகாண சபைகள் அமைச்சர் விஜயக்கோன் நிர்வாக ரீதியாக முரண்பாடான அறிக்கைகளை வெளியிட்டுள்ளதைக் கண்டிக்கிறோம்.

அதேவேளையில் இச்செயற்பாடுகளை, இலங்கை-இந்திய ஒப்பந்தத்தைச் சீர்குலைக்கும் இலங்கை அரசின் ஆரம்ப நடவடிக்கையாகவே ஈ. என். டி. எல். எவ். கருதுகின்றது. தொடர்ச்சியாக இவ்வாறான செயற்பாடுகளை நாம் அனுமதிக்க முடியாது. இதற்கு ஒரு முற்றுப்புள்ளி காணப்பட வேண்டும்.

இலங்கை—இந்திய ஒப்பந்தத்தை உறுதியாகச் செயற்படுத்துவதற்கான வழிவகைகளை ஆராயும் பொருட்டு ஈ.என்.டி.எல்,எவ்வின் தலைவர் திரு. எஸ். காலித், பொதுச் செயலாளர் திரு. ஜி. ராஜன் ஆகியோர் தலைமையிலான தூதுக் குழு ஒன்று இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி, வெளிவிவகார அமைச்சர், வெளியுறவுச் செயலர், பாதுகாப்புச் செயலாளர், இராணுவ உயரதிகாரிகள் ஆகியோரை புதுடில்லியில் சந்தித்துப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளது.

இச் சந்திப்புக்களில்—

★ இலங்கை இராணுவத்தில் ஐயாயிரம் தமிழ் இளைஞர்களைக் கொண்ட ரெஜிமென்டை உருவாக்குவதின் ஊடாக தமிழ் மக்களின் பாதுகாப்பை நிர்வாக ரீதியாக உறுதி செய்தல்.

★ மக்கள் தொண்டர் படையினை நிர்வாக கட்டமைப்பினுள் கொண்டு வந்து சட்ட ஒழுங்கைப் பராமரித்தல் ஆகியவை தொடர்பாக வலியுறுத்தப்பட்டது.

தமிழ்நாட்டு முதலமைச்சர் கலைஞர் கருணாநிதியின் முயற்சிக்கு எவ்வாறான பங்களிப்பைச் செலுத்துவது என்பது சம்பந்தமாகவும் கலைஞருடனான சந்திப்பின்போது குழுவினர் பேசியுள்ளார்கள்.

சகல இயக்கங்களினதும் கருத்துக்களைப் பெற்று சரியான முறைப்படி இலங்கை—இந்திய ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஈ. என். டி. எல். எவ் தனது பூரண ஒத்துழைப்பை வழங்குமெனவும் கலைஞரிடம் தூதுக்குழு உறுதியளித்துள்ளது — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ–164)

## விசேட கருத்தரங்கு

கோப்பாய், மார்ச் 29

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட கோப்பாய் வடக்கு, கோப்பாய் தெற்கு கிராமசேவையாளர் பிரிவுகளில் வறுமை நிவாரணக்குழு அங்கத்தவர்களுக்கு 21ஆம், 22ஆம் திகதிகளில் விசேட கருத்தரங்குகள் நடைபெற்றன.

இக்கருத்தரங்குகளை உதவி அரசாங்க அதிபர் க. குலேந்திரா ஆரம்பித்து வைத்தார். [க–72]

## கிளிநொச்சியில் ஆசிரியர் பற்றுக்குறை நீங்கும்

வட்டக்கச்சி, மார்ச் 29

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளில் ஆசிரியப் பற்றுக் குறை நீங்க உள்ளது.

வசதிக் கட்டணத்தில் கல்வி கற்பிக்கும் சகல ஆசிரியர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்குவதற்கு மாகாண சபை உறுப்பினர்கள் ஏற்பாடு செய்து வருகின்றனர்.

இம்மாவட்ட பாடசாலைகளில் வசதிக் கட்டணத்தில் கல்வி கற்பிற்கும் ஆசிரியர்களின் விவரங்களைத் திரட்டித் தருமாறு அவர்கள் கொத்தணி அதிபர்களுக்கு கடிதங்களை அனுப்பியுள்ளனர்.

அத்துடன் வசதிக் கட்டண ஆசிரியர்களை சான்றிதழ்களுடன் வந்து சந்திக்குமாறு கடிதத்தில் கோரப்பட்டுள்ளது. [க–163]

## செஞ்சிலுவைச் சங்க உணவுப் பொருள்கள்

தாளையடி, மார்ச் 29

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள 250 வறிய குடும்பங்களுக்கு செஞ்சிலுவைச் சங்கம் உணவுப் பொருள்கள் அடங்கிய பொட்டலங்களை வழங்கியது.

அரிசி, சீனி, தேயிலை, மைசூர் பருப்பு ஆகிய உணவுப் பொருள்களடங்கிய பொட்டலங்கள் வழங்கப்பட்டன. (க-144)

## நாடுதிரும்பினார்

கொழும்பு, மார்ச் 29

வடக்கு கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. அ. வரதராஜப்பெருமாள் புதுடில்லியிலிருந்து கடந்த சனிக்கிழமை கொழும்பு திரும்பினார்.

ஞாயிற்றுக்கிழமை அவர் திருகோணமலை சென்றார். (உ–எ)

## பதவி மாற்றம்

கோப்பாய், மார்ச் 29

வலி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழ் கடமையாற்றிய 11 பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்கள் கிராம சேவையாளர்களாகப் பதவி மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான பயிற்சி வகுப்புகள் தற்போது நடைபெற்று வருகின்றன. (ச-172)

## யூனிசெப் வீடுகள்

கோப்பாய், மார்ச் 29

ஐக்கிய நாடுகள் அகதிகள் புனர்வாழ்வு ஸ்தானிகர் ராலயத்தின் யூனிசெப் உதவியுடன் கோப்பாய் வடக்கு, கோப்பாய் தெற்கு ஆகிய பகுதிகளில் ஒவ்வொரு வீடு கட்டிமுடிக்கப்பட்டு உள்ளதாக வீடமைப்பு உத்தியோகத்தர் திரு. எஸ். நாகேந்திரன் தெரிவித்தார். [க-72]

## புதிய மின்கம்பங்கள்

கோப்பாய், மார்ச் 29

கோப்பாய் வடக்கு சூசையப்பர் கோவிலுக்கு அண்மையில் சேதமடைந்திருந்த மின் விளக்கு கம்பங்களுக்குப் பதிலாக புதிய மின்கம்பங்கள் டாற்றப்பட்டுள்ளன. (க-72]

## ஒய்வூதிய தாமதம் நீங்கும்

மட்டக்களப்பு, மார்ச் 29

ஆசிரியர் அல்லது அதிபர்கள் ஒய்வூதியம் பெறுவதில் ஏற்பட்டுள்ள தாமதங்களை நிவர்த்தி செய்ய கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

ஆசிரியர் சுயவிபரக் கோவை கல்வி அமைச்சிலிருந்து வரும் அதிகாரி ஒருவர் பார்வையிட்டு அமைச்சுமூலம் ஒய்வூதிய திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கும் முறை நீக்கப்பட்டுள்ளது.

இனி ஆசிரிய சுயவிவரக் கோவை மாவட்ட கல்விக் காரியாலயத்தால் பார்வையிடப்பட்டு நேரடியாக ஒய்வூதிய திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்படும். (ச-21)

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



**செல்வன் நக்கீரன் நவரத்தினம்**

தோற்றம்: 1958 – 1 - 15　　மறைவு : 1985 - 4 - 11

இவரின் 4-ம் ஆண்டு நினைவு நாளையொட்டி அண்ணுமலை வைரவர் கோயிலில்
**இன்று 29-3-89 புதன்கிழமை அன்னதானம் நடைபெறும்.**

அண்ணமலை லேன்,
சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.　(10203)

**சு. நவரத்தினம் குடும்பத்தினர்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**திருமதி நீலாம்பிகை கனகலிங்கம்**
(சங்கீதபூஷணம்)

தோற்றம்: 6 – 02 – 1921　　மறைவு: 1 – 03 – 1989

அன்னாரது இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும், பல வழிகளிலும் உதவி நல்கிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன் 31–3–1989 வெள்ளிக்கிழமை அன்று நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்திலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், சகோதரர், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பெறுமக்கள்,
மைத்துனிமார், மச்சாள்மார்.

12/3, அருளம்பலம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.　[10410]

## ஓராண்டு நினைவஞ்சலி



**இராமலிங்கம் சண்முகலிங்கம்**
[Retired Officer - in Charge, Price Control Dept]

தோற்றம்: 9– 10- 1929　　மறைவு: 8- 4- 1988

திதி: 29- 3- 1989

வெள்ளை மனதுடனே
கள்ளம் சிறிதுமின்றி
சிரிக்கச் சிரிக்கப் பேசி - எம்மை
சிந்திக்க வைத்தீர்கள்!

எல்லாக் காரியங்களையும் பேச்சால்
வெல்ல வைத்து உதவிய தந்தையே!
யார் இனி எமக்குளர்?
பாரினில் எமக்கு பல பணிகள் செய்ய

காலன் உம்காலத்தைக் கணித்து
பாசக்கயிற்றை வீசி அழைத்தானோ?
எங்கிருந்தாலும் உம்
ஆத்மா சாந்தியடைக! ஓம் சாந்தி!

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள், மைத்துனர்கள்.

29, சோமசுந்தரம் அவனியூ,
சுண்டிக்குளி.　(10200)

## ஓராண்டு நினைவஞ்சலி



**அமரர் சுப்பையா அருள்ராஜ்**
(தவம்)
(கிராமசேவை அலுவலர். ஈச்சமோட்டை)

மண்ணகம்: 25 - 05 - 1947　　விண்ணகம்: 29 - 03 - 1988

அன்பதனல் எமையாண்ட அருளின் கோவே!
அறவழியை அமைவுடனே ஆக்கித் தந்தாய்
துன்பமெமை அணுகாது வழி சமைத்தாய்
தூயவழி சென்றிடநல் மொழி பகர்ந்தாய்
என்புடனே யுனது உடல் உருகிச் சோர
உயிரீந்து ஓராண்டு கழிந்ததையா!
மன்னவனே! உன்பிரிவால் வாடுகின்றோம்!
சாந்திபெற வேண்டுகின்றோம் உந்தன் ஆன்மா!

அன்புத் துணைவி: வசந்தா,
அருமைப் பிள்ளைகள்:
சௌதாமினி, தட்ஷாயினி.

22/4, பிள்ளைச்சர் வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.　[10398]

## மூன்றும் ஆண்டு நினைவஞ்சலி



**இராசரத்தினம் பிரிதிவிராஜ்**
(கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவன்)

தோற்றம்: 7-6-1962　　மறைவு: 1-4-1986 (லண்டன்)

திதி: 29-3-1989

கண்மூடித்திறக்கையிலே ஆண்டு மூன்றுகியதே!
கண்ணீர்கள் விழிகளிலே கலைந்துபோக மறுக்கின்றதே
உன் எண்ணங்கள் எமை நிதமும் நலிகிறதே.
உனைநினைத்து ஏங்கும் விழிகளுக்கு
என்ன பதில் நாம் சொல்ல?
எங்கே எம் செல்வன் என்றழைக்கும் உனைப்
பெற்றவர்க்கென்ன பதில் நாம் சொல்ல!
உற்ற ஓர் துணைதனை இழந்து நிற்கும் - உன்
சோதரிக்கு என்ன பதில் நாம் சொல்வது?
கலங்கிய எமக்கிங்கே காலமெலாம் நீயேதான்
நினைக்காத நேரமென்பது எமக்கிப் பிறவியில் இல்லை.
உமது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஆண்டவனை வேண்டும்:

தந்தை, தாய், தங்கை-

உடையார் ஒழுங்கை,
கொக்குவில்.　(10422)

## ஈராண்டு நினைவஞ்சலி

மலர்வு: 1967 — 06 — 27



உதிர்வு: 1987 — 03 — 21

**செல்வி முருகேசு சந்திரமதி**

திதி: 29 - 03 - 1989

தண்ணொளி வீசும் தண்மதிபோல்
அன்பொளி வீசிய சந்திரமதியே! - எம்
குலக் கொடியே குலவிளக்கே!
இருயுக மென ஈராண்டு சென்றதம்மா!
இனியுன் மதிமுகம் காணும் யுகமேதம்மா?
அன்பும் அறிவும் நிறைந்த பாமதியே
பண்பும் தென்பும் வளர்த்த சுடரொளியே!
சங்கம் வளர்த்து சமூகம் படைத்த
சந்திரமதியே காவியம் படைத்தனையோ?
பாரதிகண்ட புதுமைப் பெண்ணென — வாழ்வின்
பாதியிலே புதுயுகம் சென்றனையோ? அன்பே - உன்
ஆத்மா சாந்தி பெற
இறைவனை இறைஞ்சி நிற்கின்றோம் - உமது
இழப்பின் சோகத்தால் தவிக்கும்

அன்பு
**அப்பா, அம்மா,
தம்பிகள், தங்கை,
உறவினர்கள்.**

187, ஆறுமுகம் றோட்,
வட்டக்கச்சி.　(C/1568)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யா மொழி

**குறள்:-**

குன்றனார் குன்ற மதிப்பிற் குடியொடு
நின்றன்னார் மாய்வர் நிலத்து

**பொருள்:-**

(கொள்கையிலும் குணங்களிலும் சலனமில்லாத தன்மையினால்) மலையைப் போன்றவர்களான மகான் கள் (மனம் நொந்து) குறைவாக எண்ணினாலும் (அவர் களுக்குத் துன்பம் செய்தவர்கள்) உலகத்தில் உயர்ந்து நின்றவர்களானாலும் குலத்தோடு அழிந்து போவார்கள்.

உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805 22073
29 - 03 - 1989 த. பெ. இல: 23

## ஆசிரியர் நியமனங்கள்

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் நிலவும் ஆசிரியர் பற்றுக்குறையை நீக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனச் செய்திகள் வந்துள்ளன.

இந்தச் செய்திகள் செயல் வடிவம் பெற்று தமிழ் மாணவர் கல்வி வசதி பெருக வேண்டும் என்றே எந்தத் தமிழனும் விரும்புவான். பெற்றோர்களை விட பாடசாலை அதிபர்கள், அதிலும் கஷ்டப் பிரதேச, கல்விநிலையில் பின்தங்கிய பாடசாலைகளின் அதிபர்கள் மிகவும் மகிழ்ச்சி அடைவார்கள்.

தமிழ்ப் பகுதிகளில் உள்ள பாடசாலைகளுக்கு பல வருடங்களாக ஆசிரியர் நியமனம் நடக்கவில்லை என்பது பரம இரகசியம். மிக அண்மையில் ஆரம்ப பாடசாலை ஆசிரியர்களும், பட்டதாரி ஆசிரியர்களும் நியமிக்கப் பட்டது பெரும் காரியமாகக் கருதப்பட்டது.

ஆனால் அந்த நியமனங்கள் மூலம் வடக்கு-கிழக்கு மாகாண ஆசிரியர் பற்றுக்குறை நீங்கி விட்டதாகக் கருத முடியாது; கூறவும் கூடாது.

வருடாந்தம் பல ஆசிரியர்கள் ஓய்வு பெற்ற போதிலும் அவர்களின் இடங்களை ஈடு செய்வதற்குக் கூட புதிய நியமனங்கள் செய்யப்பட்டதில்லை. அதனால் தமிழ்ப் பிரதேசங்களில் ஆசிரியர் எண்ணிக்கை வற்றிக் கொண்டே போனது!

வசதிக் கட்டண ஆசிரியர்களும், தொண்டர் ஆசிரியர்களும் இல்லையெனில், தமிழ்ப்பகுதிகளின் பாடசாலைகள் பலவும் மேலும் ஆட்டம் கண்டிருக்கும் என்பது பல அதிபர்களது அனுபவபூர்வமான கருத்து.

வசதிக்கட்டண, தொண்டர் ஆசிரியர்கள் பிரதான ஆசிரிய சேவையில் உள்ளவர்களைவிட கடமை உணர்ச்சியுடனும், விசுவாசத்துடனும், கடினமாக உழைப்பவர்கள் என்றும் பல அதிபர்கள் கூறக் கேட்கலாம்,

எனவே, புதிய ஆசிரியர் நியமனங்களின் போது தொண்டர் ஆசிரியர்களுக்கு முதலிடம் அளிக்கப்பட வேண்டும். அதனை நன்கு உணர்ந்து, அவர்களை நிரந்தரமாக்க நடவடிக்கை எடுக்கப்படுவது வரவேற்கத்தக்கதாகும்.

பாடசாலைகளில் இருந்து வெளிப்பட்டவர்களை நேரடியாக ஆசிரியர்களாக நியமிப்பதைவிட பல வருடகால அனுபவம் உள்ள தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்குவது கல்வித் தரத்தை உயர்த்தவும் வழிசெய்யும்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் கணித, விஞ்ஞான ஆங்கில ஆசிரியர்களை நியமிப்பதற்காகப் போட்டிப் பரீட்சை நடத்த ஏற்பாடாகி வருகிறது என்ற தகவலும் உண்டு. நீண்ட காலத்திற்குப் பின்னர் நடைமுறைக்கு வரும் இந்த நல்ல வழிமுறை வரவேற்கப்பட வேண்டியது.

கடந்த பல ஆண்டுகளாக முகமன், செல்வாக்கு, லஞ்சம் என்ற ''தகுதிகள்'' மூலம் ஆசிரியர் நியமனங்கள் நடந்தன. அதன் காரணமாகத் திறமை உள்ள பல இளைஞர், யுவதிகள் வசதி குறைந்தவர்களாக இருந்தமையால், ''தகுதிகள்'' பெற வசதி இல்லாதவர்களாக இருந்தமையால், வேலைவாய்ப்புப் பெற முடியவில்லை!

பெயருக்குப் போட்டிப் பரீட்சையும், ''உள்ளுக்குள் வேலை செய்தல்'' அவசியம் என்ற நிலையும், இருக்கக் கூடாது. திறமை குடும்ப நிலைமை ஆகிய இரண்டு தகுதிகளும் மட்டுமே மேலோங்கி நிற்க ஆசிரியர் நியமனங்கள் செய்யப்பட வேண்டும்.

அந்த நடைமுறை ஆசிரிய நியமனத்துக்கு என்று மட்டுமன்றி, தமிழ்ப் பகுதிகளில் சகல அரசாங்க பதவிகளுக்கும் பொருந்த வேண்டும். நியமனங்களில் அரசியல் தனிப்பட்ட, பணச் செல்வாக்குகளுக்குத் தொடர்ந்து இடம் கொடுத்தால், திறமையான, பயன் தர வல்ல சீர்மிகுந்த சேவைகளை உருவாக்க முடியாது. மக்களுக்கு உரிய சேவைகளைச் செய்யவும் முடியாது.

## தமிழகத்தில் 1,500 பேர் கைது

சென்னை, மார்ச் 28

ஜெயலலிதா இராஜினாமா விவகாரம் தொடர்பாக தமிழ்நாட்டில் இடம்பெற்ற வன்செயல்கள் தொடர்பாக 1,500 பேர் மட்டுமே கைது செய்யப்பட்டனர்; எதிர்க் கட்சியினர் கூறுவதுபோல பத்தாயிரம் பேர் அல்ல.

இப்படி முதலமைச்சர் கருணாநிதி நேற்று சட்டசபையில் சொன்னார்.

சட்டசபையில் எதிர்க் கட்சியினர் கிளப்பிய உரிமைப் பிரச்சினைக்கு பதிலளித்துப் பேசுகையில் முதலமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

கைதானவர்கள் சுமுக நிலைமை ஏற்பட்டவுடன் விடுதலை செய்யப்படுவார்கள் என்றும் முதலமைச்சர் சொன்னார்.

கட்சிக் கணக்கு சம்பந்தமாக செல்வி ஜெயலலிதா மீது நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்று பொலீஸாருக்கு உத்தரவிடப்பட்டிருப்பதாகவும் திரு. கருணாநிதி சொன்னார். (எ)

## 4 பேர் பலி

ஜெருசலம், மார்ச். 28

கைப்பற்றப்பட்ட அரபுப் பிரதேசத்தில் இஸ்ரவேல் ராணுவம் சுட்டு நான்கு பலஸ்தீனியர் மரணமடைந்தனர். (எ)

★ இந்திய வர்த்தக உறவு முறிவால்

# நேபாளத்தில் உணவுத் தட்டுப்பாடு

# பங்கீட்டு விநியோக முறை ஆரம்பம்

### நெருக்கடியைச் சமாளிக்க அரசு நடவடிக்கை

காத்மண்டு, மார்ச் 28

நேபாளத்துடனான வர்த்தக உடன்படிக்கை காலாவதியானதைத் தொடர்ந்து இந்தியா அந்த நாட்டுடனான முக்கிய போக்குவரத்துப் பாதைகளை மூடிவிட்டது.

இதனால் நேபாளத்தின் வெளியுலகத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டு விட்டன.

பொது எல்லைப்புறத்தில் உள்ள இந்தியாவுக்கும் நேபாளத்துக்கும் இடையேயான 13 போக்குவரத்துப் பாதைகளில் இரண்டைத் தவிர ஏனையவை மூடப்பட்டு விட்டன.

இந்தியாவுக்கும் சீனாவிற்கும் இடையில் உள்ள நேபாளம், அத்தியாவசிய உணவுத் தேவைகளுக்கு இந்தியாவையே பெரும்பாலும் நம்பியிருக்கிறது.

இந்தியாவில்இருந்தே தனது தேவைகளில் அரைப்பங்கை நேபாளம் இறக்குமதி செய்து வந்தது.

இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக உடன்படிக்கையைப் புதுப்பிக்க நேபாளம் முன்வராததினால்தான் அது காலாவதியாகியது.

இதனால் நேபாளத்தில் உணவுப் பொருள்களுக்கு பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டு உள்ளது.

தேவையான அளவு உணவு கையிருப்பில் இருப்பதாக நேபாள அரசு அறிவித்த போதிலும், பங்கீட்டு முறையில் அத்தியாவசியப் பொருள்களை மக்களுக்கு விநியோகிக்க அங்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

உடன்படிக்கை காலாவதியானாலும் நேபாள மக்களை கஷ்டத்தில் ஆழ்த்தப் போவதில்லை என்று இந்திய அரசு அறிவித்துள்ளது.

குழந்தைகளுக்கான பால்மா உணவு வகைகள் மற்றும் மருந்துகளை தடையின்றி இந்தியா காத்மண்டுவுக்கு அனுப்பி வைக்கும். ஆனால் எரிபொருள் முதலியவற்றை சலுகை அடிப்படையில் இந்தியா நேபாளத்துக்கு அனுப்பி வைக்காது — இப்படி புதுடில்லி வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தியாவும் நேபாளமும் 39 ஆண்டுகளுக்குமுன்னர் நட்புறவு உடன்படிக்கை ஒன்றைச் செய்திருந்தது.

ஆனால் அண்மைக் காலமாக நேபாளம் சீனாவுடன் ராஜதந்திர உறவுகளை வளர்த்து வந்திருக்கிறது.

இது இந்திய அரசுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியது

கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் நேபாளம், சீனாவிடம் இருந்து நவீன ஆயுதங்களை வாங்கியது.

1962இல் சீனாவும் இந்தியாவும் எல்லை யுத்தம் ஒன்றில் ஈடுபட்டிருந்தது தெரிந்ததே.

39 ஆண்டுகள் நட்புறவு உடன்படிக்கை ஒருதலைப்பட்சமானது; அதை மாற்றி அமைக்க வேண்டும் என்று நேபாளம் வலியுறுத்தி வருகிறது.

கடந்தவாரம் காலாவதியான வர்த்தக உடன்பாடு, நேபாளத்தின் ஏனைய நாடுகளுடனான போக்குவரத்துத் தொடர்பையும் கட்டுப்படுத்துவதாக அமைந்துள்ளதை நேபாளஅரசு விரும்பவில்லை.

தற்போது இரு நாடுகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள ராஜதந்திர நெருக்கடி பற்றி நேபாள அரசுப் பேச்சாளர் கருத்துத் தெரிவிக்கையில், இந்தியாவுடனான உறவை சமத்துவஅடிப்படையில் புதுப்பிக்கவேண்டும். இதில்தோல்வி கண்டோமானால் இன்னும் பல ஆண்டுகளுக்கு இந்தியாவில் தங்கிவாழும் நிலைதான் ஏற்படும் என்று கூறினார்,

முதிர்ச்சியடைந்த ராஜதந்திர உறவு இருநாடுகளுக்கும் இடையே ஏற்படும்வரைஎமது மக்கள் கஷ்டங்களைத் தாங்கிக்கொள்ளத் தயாராக இருக்கவேண்டும் என்றும் அப் பேச்சாளர் சொன்னார்.

உலகில் மிகவும் வறியநாடுகள் 10 உள்ளன. அவற்றில் ஒன்று நேபாளம். (எ)

## லெபனானில் தொடரும் கிறிஸ்தவ-முஸ்லிம் மோதல்

பேரூட், மார்ச் 28

லெபனானில் கிறிஸ்தவ படைகளுக்கும் மெலனேஷிய முஸ்லிம் படைகளுக்கு இடையேயான மோதல் தொடருகின்றது.

முஸ்லிம் படைகளுக்கு சிரியாவின் அரசுப்படைகள் உதவுகின்றன.

சிரிய படைகளை வெளியேற்றியே தீருவேன் என்றுகிறிஸ்தவபடைத் தளபதி கூறியிருக்கிறார்.

பேரூட் நகரம் முன்னர் 8 தரம் போர்களில் அழிந்து போனது. 9 ஆவது தரம் அழிந்து போனாலும் பரவாயில்லை. சிரிய படைகளை வெளியேற்றியே தீர வேண்டும் — என்று கிறிஸ்தவ படைத்தளபதி அறிவித்தார். (எ)

## சோவியத் பொதுத் தேர்தல்

மாஸ்கோ, மார்ச். 28

சோவியத் நாடாளுமன்றத்திற்கான பொதுத் தேர்தலில் லெனின் கிராடிலும் லித்துவேனியா மற்றும் பால்டிக் பிராந்தியங்களிலும் கம்யூனிஸ்ட் கட்சியை எதிர்த்துப் போட்டியிட்ட சுயேட்சை வேட்பாளர்களே பெரும்பாலான இடங்களில் வெற்றி பெற்றனர் என்று அறிவிக்கப்பட்டது. (எ)

## ஸ்டாலினின் ஆட்சியில் நடந்த பயங்கரப் படுகொலை!

மாஸ்கோ, மார்ச்.28

சர்வாதிகாரி ஸ்டாலினின் உத்தரவின் பேரில் கொல்லப்பட்டவர்களின் சடலங்கள் அடக்கம் செய்யப்பட்ட பிரமாண்டமான புதைகுழி ஒன்று உக்ரேனிய வனப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

1930 ஆம் ஆண்டுகளில் மக்களின் எதிரிகள் என்று குற்றஞ்சாட்டப்பட்டவர்களே ஸ்டாலினின் இரகசியப் பொலிஸாரால் கொல்லப்பட்டுப் புதைக்கப்பட்டனர் என்று அறிவிக்கப்படுகிறது. (எ)

இஸ்ரவேலுக்கு எகிப்து புத்திமதி

## பேச்சுக்கள் மூலமே தீர்வு! இன்றேல் அழிவு தொடரும்

செய்ரோ, மார்ச் 28

பலஸ்தீன விடுதலை இயக்கத்துடன் நேரடிப் பேச்சுக்களை நடத்த இஸ்ரவேல் அரசு முன்வரா விட்டால் இன்னுமொரு 40 ஆண்டுகளுக்கு மத்திய கிழக்கில் அழிவுகள் தொடரும்.

எகிப்து ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக் முன்கண்டவாறு தெரிவித்தார்.

இஸ்ரவேலிய பத்திரிகையாளர் குழு ஒன்று ஜனாதிபதி முபாரக்கைச் சந்தித்து பேச்சுக்களை நடத்தியது.

சந்தர்ப்பத்தைத் தவறவிடாது, பலஸ்தீனிய விடுதலை இயக்கத்துடன் நேரடிப் பேச்சுக்களை நடத்த இஸ்ரவேல் முன்வரவேண்டும் என்றும் ஜனாதிபதி அப்போது வலியுறுத்தினார்.

## நடந்தவை முடியட்டும் நடப்பவை நல்லதாகட்டும்

### முதல்வர் கருணாநிதி பேச்சு

சென்னை, மார்ச் 28

நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும்; நடப்பவை நல்லவையாக அமையட்டும். — முதலமைச்சர் கருணாநிதி தமிழ் நாடு சட்டசபையில் நேற்றுத் தெரிவித்தார்.

அ. தி. மு. க. எம். எல்.ஏக்கள் மீது விதிக்கப்பட்ட இடைக்காலத் தடை உத்தரவை விலக்கவேண்டும் என்ற கோரிக்கை தொடர்பாக முதலமைச்சர் பேசியபோது இப்படிச் சொன்னார்.

'வரவு - செலவுத் திட்ட விவாதத்தின் போது முக்கிய எதிர்க் கட்சி எம்.எல். ஏக்கள் முகந்தர வேண்டியது அவசியம் அவர்களை ... பது உகந்ததாக ... என்றும் திரு. கருணாநிதி தெரிவித்தார்.

முதலமைச்சரின் பேச்சைத் தொடர்ந்து அமைச்சர் அன்பழகன் இடைக்காலத் தடை உத்தரவை ரத்துச் செய்யும் பிரேரணையை முன் மொழிந்தார்.

ஏகமனதாகப் பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

தடைஉத்தரவு ரத்துச்செய்யப்படவேண்டும் என்ற கோரிக்கையை இந்திரா காங்கிரஸ் எம். எல். ஏ. குமரி அனந்தன் முன்வைத்தார்.

வன்முறையில் ஈடுபட்ட ஒரு பிரிவினர் சபையில் இருக்கையில், இன்னொரு பிரிவினரை ... என்று குமரி அனந்தன் ... டார். (உ-எ)

# பதவி விலகும் கடிதம் எழுதும் நிர்ப்பந்தம் ஏற்பட்டது எதற்காக?

### ஜெயலலிதாவிடம் கேள்வி?

சென்னை, மார்ச். 28

அரசியலில் இருந்து விலகுவதாக கடிதம் எழுதும் அளவிற்கு ஜெயலலிதாவுக்கு ஏற்பட்ட கஷ்டம் என்ன? என்று தமிழ் நாடு இந்திராகாங்கிரஸ் பொதுச் செயலாளர் திண்டிவனம் ராமமூர்த்தி அறிக்கை ஒன்றில் கேட்டிருக்கிறார்.

அறிக்கை வருமாறு;

ஜெயலலிதா பற்றிய செய்தி புதிய சூழ்நிலையை உருவாக்கி இருக்கிறது.

ராஜினாமாக் கடிதத்தை ஜெயலலிதா மறுக்கவில்லை. அந்தக் கடிதம் சபாநாயகருக்கு அனுப்பிவைக்கப்படவில்லை என்று மட்டுமே அவர் கூறியிருக்கிறார்.

ஆகவே எந்தச் சூழ்நிலையில், ஏன்? எதற்காக? இப்படி ஒரு கடிதம் எழுதினார் என்பதை ஜெயலலிதா தமிழக மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும்.

இது கட்சிப் பிரச்சினை அல்ல. பொது வாழ்வில் ஈடுபட்டு உள்ள ஒரு கட்சியின் தலைமை பற்றிய செயற்பாடுகள் குறித்த பிரச்சினை இது —

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. (எ)

## யூகோஸ்லேவியாவில் இன மோதல்கள்

பெல்கிரேட், மார்ச் 28

யூகோஸ்லேவியாவில் அல்பேனிய வம்சாவளியின் கொஸவோ மாகாணத்தில் நடத்திவரும் வன்செயல்களில் இரண்டு பொலீஸ் உயர் அதிகாரிகள் உயிரிழந்தனர்.

இதைத் தொடர்ந்து கொஸவோ முழுவதும் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப் பட்டது.

செர்பியா மாகாணத்துடன் இணைவது என்று கொஸவோ பிராந்திய சபை தீர்மானித்தது. இதை எதிர்த்து கொஸவோவில் வசிக்கும் அல்பேனிய இனத்தவர் ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகின்றனர். (எ)

## மகரிஷி மகேஷ் யோகியின் சொர்க்க நகரங்கள்

வாஷிங்டன், மார்ச்.28

சொர்க்கம் போன்ற நகரங்களை அமைக்க மகரிஷ் மகேஷ் யோகி திட்டமிட்டிருக்கின்றார்.

இரைச்சலற்ற சூழல், சுத்தமான நீர் ஆகியன கொண்டவையாக சொர்க்க நகரங்களைக் கட்டத் தேவையான வடிவமைப்பையும் மகரிஷி தயார் செய்துள்ளார்.

அவரது யோசனையின்படி, 'மகரிஷி ஹெவின் அன் எர்த் டெவலப்மெண்ட் கோர்பரேஷன்' (Maharishi Heaven and Earth Development Corperation) என்ற அமைப்பு அமெரிக்காவின் வடபகுதியில் 50 சிறிய சொர்க்க நகரங்களை உருவாக்கி வருகின்றது.

இது போன்ற சொர்க்க நகரங்களை 108 நாடுகளில் அமைக்க மகேஷ் யோகி விரும்புவதாக, அந்த அமைப்பின் தலைவர் கூறினார். (எ)

இந்த ஆண்டில்

## பிரதமர் பெனாஸிர் பூட்டோவின் முதலாவது இந்திய விஜயம்

புதுடில்லி, மார்ச். 28

பாகிஸ்தான் பிரதமர் பெனாஸிர் பூட்டோ இந்தியாவுக்கு விஜயம் செய்யவிருக்கிறார்.

இந்த ஆண்டில் அவர் விஜயம் செய்வார் என்று புதுடில்லி வந்த பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் குலாம் செர்வார் சீமா சொன்னார்.

இருதரப்பு மற்றும் சர்வதேச விவகாரங்கள் பற்றி திருமதி பெனாஸிர் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியுடன் பேசுவார் என்றும் அவர் சொன்னார். (எ)

தக்கர் கமிஷன்

## அரசு மீது வழக்குத் தொடர கேகர்சிங் மகன் முடிவு

புதுடில்லி, மார்ச் 28

இந்திராகாந்தி கொலை சம்பந்தமான பின்னணிகளைவிசாரிக்க தக்கர் கமிஷன் அறிக்கை வெளியிடப்பட்டுவிட்டது அல்லவா!

இக்கொலை சம்பந்தமாக வேறு நால்வர்மீது அரசு வழக்குத் தாக்கல் செய்யவிருப்பதாகவும் செய்திகள் ஏற்கனவே வெளியாகின.

இந்தநிலையில் இக்கொலை தொடர்பாக ஏற்கனவே தூக்கிலிடப்பட்ட இருவர்களில் ஒருவரான கேகர்சிங்கின் மகன் ராஜேந்தர்சிங் அரசு மீது வழக்குத்தொடரப்போவதாக அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

அறிக்கையில் அவர் கூறியிருப்பதாவது:

இந்திரா கொலையில் யாரோ ஒருவரைப் பாதுகாக்க என் தந்தை தூக்கிலிடப்பட்டுவிட்டார். இந்தக் கொடுமைக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடருவேன். என் குடும்பத்துக்கு ஏற்பட்ட களங்கத்தை நீக்கஇதுவே வழி —

இப்படி அவர் தெரிவித்துள்ளார். (எ)

## 18 கோடி ஆண்டு வயதான மலை

வெனிசுலா நாட்டில் கனேமா தேசிய பூங்காவில் ரோரெய்மா என்ற பெயரில் மலை ஒன்று உண்டு.

அந்த மலையின் உயரம் 10 ஆயிரம் அடி ஆகும்.

18 கோடி ஆண்டுகளுக்கு முந்தியது அம்மலை என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளனர்.

பல்லி இனத்தைச் சேர்ந்த படுபயங்கரமான உயிரினங்கள் அம்மலையில் வாழ்ந்தன என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். (எ)

அமைச்சர் சிதம்பரம் பேச்சு:

## இராமன் இருப்பிடம் அயோத்தி! ராஜீவ் இருப்பிடம் காங்கிரஸ்!

சிங்கம்புணரி மார்ச் 28

ராமன் இருக்கும் இடமே சீதைக்கு அயோத்தி என்பது போல்ராஜீவ் இருக்கும் இடமே காங்கிரஸ் என தொண்டர் நம்பிக்கை கொண்டுள்ளனர் என்று மத்திய அமைச்சர் ப சிதம்பரம் கூறினார்.

சிங்கம்புணரியில் காங்கிரஸ் செயல்வீரர்கள் கூட்டத்தில் மத்திய அமைச்சர் ப. சிதம்பரம் பேசியதாவது:

காங்கிரஸ் கட்சிக்கு 102 ஆண்டு சரித்திரம் உண்டு. பல முறை கட்சிக்கும், ஆட்சிக்கும் சோதனைகள் வந்துள்ளன. அதை எல்லாம் தாண்டி காங்கிரஸ் மக்களின் இயக்கமாக நிற்கிறது இந்தியா பல்வேறு மொழிகள், மதங்கள், கலாசாரங்கள், வேறுபட்ட உணவு, உடை பழக்க வழக்கங்கள் உள்ள நாடு. இப்பேர்ப்பட்ட இந்தியாவில் உள்ள லட்சோபலட்ச சங்க மக்கள் ராஜீவை தங்கள் தலைவராக காலத்தின் கட்டாயத்தால் ஏற்றுக் கொண்டனர். வி. பி. சிங்கையோ, தேவிலாலையோ, வாஜ்பாயையோ, என். டி. ராமராவையோ ஒரு தேசிய தலைவராக ஏற்றுக் கொள்ளவில்லை. இவர்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு கொள்கை வைத்திருக்கிறார்கள். அது காங்கிரசை தோற்கடிக்க வேண்டும் என்பது தான்.

தமிழக தேர்தல் வேறு. பார்லிமெண்ட் தேர்தல் வேறு வி. பி.சிங் காங்கிரஸை விட்டு வெளியேறினால் ராஜீவ் ஆட்சி கவிழ்ந்து விடும் என எதிர்பார்த்தார்கள் 15 எம். பி.க்கள் மட்டுமே வெளியேறினார்கள்,

இந்திய மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கும் ராஜீவ் இருக்கும் இடம் தான் காங்கிரஸ். இதை நான் சொன்னதற்கு சில பத்திரிகைகள் என்னை கூஜா என்றும், அடிவருடி என்றும்எழுதியுள்ளன.

தி. மு. க-காங்கிரஸ் கூட்டு வரும் என்ற செய்தி கூட மக்களுக்குப் பிடிக்கவில்லை. அதுதான் மதுரை கிழக்கிலும், மருங்க புரியிலும் காங்கிரஸ் அடைந்த மோசமான தோல்விக்குக் காரணம் என்று அமைச்சர் சிதம்பரம் பேசினார். [எ-ந]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் அழைக்கின்றது
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
★ தரமான வர்ண நிழற்படப் பிரதி ஒன்று 5/-
★ நெகட்டிவ் [Processing] செய்தல் இலவசம்
★ விற்பனை வர்ண நிழற்படச் சுருள்கள்
Kodak Fuji Konica
Tudor Forte B/W
பெற்றுக்கொள்ள நாடுங்கள்

# உதயன்

29 - 03 - 1989 புதன்கிழமை

எம்மிடம் வர்ண நிழற்படப்பிரதி
பிரதியாக்கம் செய்பவர்களுக்கு
வர்ண நிழற்படச் சுருள்கள்
போட்டோ அல்பங்கள் இலவசம்
மேலதிக விபரங்களுக்கு
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

## மரண அறிவித்தல்கள்

### அம்பிகைபாகர் பார்த்திபன் (J.R)

அம்பிகைபாகர் பார்த்திபன் 26.3.89 அன்று அகால மரணமானார். அன்னார் அம்பிகைபாகர் தங்கரத்தினம் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும், பிரேமச்சந்திரா, செந்தூர்ச்செல்வம், கதிர்காமச்செல்வம் ஆகியோரின் அன்புச்சகோதரனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 29.3.89 இன்று காலை 9 மணியளவில் தகனக்கிரியைக்காக அன்னாரது இல்லத்திலிருந்து செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ. செந்தூர்ச்செல்வன்

சந்திரசேகரவிளையகர் வீதி,
நல்லூர் வடக்கு,
கல்வியங்காடு. (10208)

### திருமதி தங்கம்மா சுப்பிரமணியம்

திருமதி தங்கம்மா சுப்பிரமணியம் காலமாகிவிட்டார். அன்னாரது ஈமக்கிரியைகள் அவரது துன்னாலை வடக்கு இல்லத்தில் 29-3-89 இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும்.

தகவல்:
பத்மாவதி தங்கராஜா

துன்னாலை வடக்கு,
கரவெட்டி. [10425]

### நீக்கிலாப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை

கரம்பொனைச் சேர்ந்த நீக்கிலாப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை 27-03-1989 ல் காலமாகிவிட்டார்.

இவர் சந்திராவின் அன்புக் கணவரும், சுரேந்திரன் (France), குணேந்திரன் (Denmark), விஜி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலம் சென்ற திருமதி புஷ்பம் முத்தையா (Sebastian Stores) வின் அருமைச் சகோதரரும், திருமதி டொறின் தம்பிராஜா, திரு. ஜோர்ஜ் உவாஷிங்ரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 30-03-1989 வியாழக்கிழமை காலை 8-30 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து நல்லடக்கத்திற்காக கரம்பொன் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

ஒழுவில் றோட்,
கரம்பொன்,
ஊர்காவற்றுறை.

தகவல்:
மனைவி
[10218]

### திரு. தம்பிராசா

[இளைப்பாறிய P. W. D ஓவசியர்]

ஏழாலை மேற்கைச் சேர்ந்த இளைப்பாறிய P.W.D ஓவசியர் தம்பிராசா 25-03-1989 இல் காலமானார்.

இவர் கனகம்மாவின் அன்புக் கணவரும், தங்கேஸ்வரி [கனடா], மகேஸ்வரன், யோகேஸ்வரன் [கனடா] ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ் சென்ற கனகம்மா, இரத்தினம் J.P., காலஞ் சென்ற சிவநேசம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ் சென்ற சிவப்பிரகாசம், இராமலிங்கம், மனோன்மணி ஆகியோரின் அன்பு மைத்துனரும், சிவசோதிநாதன் [கனடா], சந்திரகுமாரி, தேவரஞ்சினி [கனடா] ஆகியோரின் அன்பு மாமனும், சுஜந்தா [கனடா], ஜங்கரன், சிவகரன், சுதாகரன், சுஜி [கனடா], சுஜோ [கனடா] ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இல்லத்தில் 30-03-1989 வியாழக்கிழமை முற்பகல் 10-00 மணிக்கு இறுதிச் சடங்குகள் நடைபெற்று, பூதவுடல்தகனக் கிரியைக்காக மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

''கனகமாளிகை''
ஏழாலை மேற்கு,
சுன்னாகம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்
[10430]

### முருகேசு வைத்தியலிங்கம்

அச்சுவேலி தெற்கு முருகேசு வைத்தியலிங்கம் (இளைப்பாறிய ஆசிரியர், அச்சுவேலி மகாவித்தியாலயம்) சிவபதமடைந்து விட்டார்.

இவர் காலம் சென்ற முருகேசு செல்லம்மாவின் சிரேஷ்ட புதல்வரும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் சச்சிதானந்தம் [விஞ்ஞான ஆசிரிய ஆலோசகர்], சதானந்தம் [பொருளியலாளர் கனடா], திலகவதி, கமலநாதன் [ஆசிரியர் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி], ஞானபூங்கோதை, சிவானந்தம் [சுவிற்ஸ்லாந்து] ஆகியோரின் அன்புத்தந்தையும் மு. இராசா [இளைப்பாறிய ஆசிரியர்], அவர்களின் சகோதரரும், செ. சண்முகராசா [இளைப்பாறிய தபால் திணைக்கள எழுதுவினைஞர்], செ. நடராசா இளைப்பாறிய [சுங்கப் பகுதிஉதவிச்சேகரிப்பாளர்], ஆகியோரின் மைத்துனரும், செ. தில்லைநாதன் [நீர்ப்பாசன இலாகா பரந்தன்], புவனேஸ்வரி [கரவெட்டி], சர்வேஸ்வரி [கனடா] ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சமய நிகழ்வுகள் 29-3-89 புதன்கிழமை பி.ப 2.00 மணிக்கு அன்னாரது அச்சுவேலி இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் அச்சுவேலி பொதுமயானத்தில் நடைபெறும்.

தகவல்:
வை. சச்சிதானந்தம்
(ஆசிரிய ஆலோசகர்)

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி. (C/2035)

## வேலையாட்கள் தேவை

யாழ். மாவட்டத்தில் உள்ள ஒரு தென்னந்தோட்டத்திற்கு நன்கு அனுபவம் உள்ள 50 வயதிற்கு உட்பட்ட தென்னந்தோட்ட வேலை தெரிந்த வேலை ஆட்கள் தேவை.

சம்பளம் மற்றும் விபரங்களுக்கு உடனடியாக நேரில் வந்து சந்திக்கவும்.

ஷப்ரு
207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
(C/2040)

## WANTED
## ACCOUNTS TRAINEES

Wanted for our Colombo Office. Minimum Part I or II I C. M. A or Similar Examination. No experience needed – Transport from Wellawatte, Nugegoda areas provided to Office, Subsidized Lunch with good Yearly increment if confirmed. Call with Bio-data., A M. L. 35, Bankshall Street, Jaffna. For those who were in Colombo, interviews could be arranged there. (C/2032)

## HOUSE OF HOPE

[HOME FOR THE DISABLED CHILDREN
INUVIL

## WANTED
## ASSISTANT WARDEN

Wanted a Resident Female Assistant Warden to look after disabled children. Ability to play musical instruments will be an added qualification.

**Applications Close:- 5th Aoril, 1989.**

Apply to:
The Manager,
House of Hope,
**Inuvil - Chunnakam.**
[C/1581]

## 3வது ஆண்டு நினைவஞ்சலி

### சிதம்பரப்பிள்ளை துரைசிங்கம் (செட்டி)

அன்னை மடியில் 06-03-1944 — ஆண்டவன் மடியில் 01-09-1986

அன்பின் திருவருளாய் அறிவின் சுடர் ஒளியாய் வாழ்ந்து எங்களை எல்லாம் இடையில் தவிக்க விட்டுப் பிரிந்து சென்ற ஆருயிர்த் தெய்வமே! எம்மை எல்லாம் கடமை கண்ணியம் கட்டுப்பாட்டுடன் வளர்த்து ஆளாக்கி எம் பலனைத் தாங்கள் அனுபவித்து மகிழ்ந்து வாழும் நேரத்தில் எங்களை ஆறாத் துயரில் விட்டுச் சென்ற ஒளி விளக்கே! எங்களின் குடும்ப விளக்காய் ஒளி வீசி அணைந்துவிட்ட உங்களை ஒருபோதும் எங்கள் இதயங்கள் மறவாது. உங்கள் நினைவுகள் எங்கள் உள்ளத்திலே என்றும் அணையாத் தீபமாக ஒளிர்ந்து கொண்டே இருக்கும். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

மயிலிட்டி வடக்கு,
மயிலிட்டி. [10219]

பிரிவால் துயருறும்,
அன்பு மனைவி, பிள்ளைகள்

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் கதிரித்தம்பி

(இளைப்பாறிய புகையிரதநிலைய அதிபர்)

நாவலியைப் பிறப்பிடமாகவும், உயரப்புலம் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட முன்னாள் அநுராதபுரம் புகையிரதநிலைய அதிபர் ஆறுமுகம் கதிரித்தம்பி அவர்கள் இலண்டனில் காலமானார். இவர் காலம்சென்ற இந்திராணியின் அன்புக் கணவரும், கலாநிதி சிவலோகநாதன் (U. K.), சரஸ்வதி (U. K.), கணக்காளர் சிவசோதிநாதன் (Canada), காலம்சென்ற Dr. ஜெகசோதிநாதன், பாலச்சந்திரன், ஜெகதீஸ்வரி-(U. K.), ஜெயலஷ்மி, காலம்சென்ற பொறியியலாளர் சந்திரசோதி ஆகியோரின் தந்தையும், மகேஸ்வரி(U.K.) காலம்சென்ற வைத்தியக் கலாநிதி நடராசா, மங்கையர்க்கரசி (Canada) வைத்தியக்கலாநிதி புவிராசசிங்கம்-(U. K.), வைத்தியக்கலாநிதி இராஜசூரியர் ஆகியோரின் அன்பு மாமனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 27-03-89 இலண்டனில் நடைபெற்றது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
S. T. சண்முகநாதன்
(மைத்துனர்)
உயரப்புலம், ஆனைக்கோட்டை.
[10220]

### வடக்கு----

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
இழந்து விட்டனர் என்று அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

வரட்சி இப்போது கிழக்கு மாகாணத்துக்கு பரவியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. திருகோணமலை மாவட்டம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. (உ-எ)

### தக்கர்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
கள் எழுந்து நின்று கோஷமிட்டனர். இதனால் சபாநாயகர் சட்டசபையை ஒத்தி வைத்தார்.

உத்தரப்பிரதேச சட்டசபையிலும் உறுப்பினர்கள் கூக்குரலிட்டு குழப்பம் செய்தனர். இதனால் இரண்டரை மணித்தியாலம் சட்டசபைக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது. ஆந்திர மாநில சட்டசபையும் குழப்பம் காரணமாக இரண்டு தடவை ஒத்திவைக்கப்பட்டது. (உ-எ)

### கொலைச். ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
இவர் கடற்றொழில் செய்பவராவர்.

இதேவேளை தெல்லிப்பளையைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவரும் சுட்டுக்கொலைசெய்யப்பட்டார். அவரது பெயர் பூபாலசிங்கம்.

அவர் வீட்டில் இருந்த சமயம் அங்கு சென்ற சிலர் அவரை வெளியே அழைத்துச் சுட்டதாக அறியப்படுகின்றது. (அ-10-9-5-51)

### நல்லூர்....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி
ஒன்றில் தடுத்துவைக்கப்பட்டு தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டனர்.

ஒருசிலர் தவிர ஏனைய அனைவரும் பின்னர் விடுவிக்கப்பட்டதாகத் தெரியவந்தது. [உ 9-10]

### இ.காங்கிரஸ்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
பீடத்தை செல்வி ஜெயலலிதா வற்புறுத்தி வருகிறாராம்.

தமிழ் நாடு சட்டசபையில் இந்திராகாங்கிரஸ் குழுவின் தலைவராக திரு. மூப்பனார் உள்ளார்,

தற்சமயம் எம். பியாக உள்ள திண்டிவனம் இராமமூர்த்தி தமிழ் நாடு காங்கிரஸ் தலைவராக நியமிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. திரு. இராமமூர்த்தி வன்னியர் சமூகத்தைச் சேர்ந்தவர். (உ-எ)

**Personal Classes**
B.M.C முன்லேன் Jaffna

## A/L

**91ஆம் ஆண்டுக்குரிய விஞ்ஞான வகுப்புக்கள் ஆரம்பம்**

1 — 4 — 1989 சனி
8-30 a.m.

Physics:-
திரு. சத்தியசீலன், B. sc.
Chemistry:-
திரு திவ்வியநாதன், B.sc.
Botany:-
திரு. சர்வானந்த, B.sc.
Zoology:-
திரு. ஈஸ்வரதாசன், B.sc.
Basic Maths:-
விஜயகுமார் B.sc.
(C/1583)

## மக்கள் தொண்டர் படை

1. இப்படை வடக்கு-கிழக்கு மாகாணத்தில் திரட்டப்படுகின்றது. கீழ்க்காணும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழர், முஸ்லிம்கள், சிங்களவர்களிடமிருந்து இப்படைக்குத் தொண்டர்கள் தேவைப்படுகின்றனர்.
   - (அ) வயது : 01-04-89-ல் 18க்கும் 30க்கும் இடைப்பட்ட வயதினராக இருக்கவேண்டும்.
   - (ஆ) ஆகக்குறைய உயரம்: 5 அடி 4 அங்குலம்.
   - (இ) ஆகக் குறைந்த நெஞ்சளவு: 30 அங்குலம். [நெஞ்சு விரிவு இன்றி]
   - (ஈ) ஆகக் குறைந்த கல்விக் தராதரம்: 6 ஆம் வகுப்பில் சித்தி
2. சம்பளமும் அலவன்சுகளும்
   - (அ) சம்பளம் : ரூபா 1590/- மாதாந்தம்
   - (ஆ) கஷ்ட அலவன்ஸ்: ரூபா 600/- மாதாந்தம்
   - (இ) வாழ்க்கைச் செலவுப்படி : ரூபா 260/- மாதாந்தம் முழுச் சம்பளத் தொகை: ரூபா 2450/- மாதாந்தம்
   - (ஈ) இலவச சீருடை; இவைகள் திரும்பவும் வழங்கப்படும்.
   - (உ) பொலிஸ் றிசேர்வ் படையினருக்கு வழங்கப்படுவது போன்று பென்சன், சேவைக் காலப் பணம் [Gratuity], லீவு, பதவி உயர்வு வாய்ப்புக்கள் வழங்கப்படும்.
   - (ஊ) சேவை மூப்பு, திறமை ஆகியவற்றின் அடிப்படையில் பதவி உயர்வு.
3. வடக்கு-கிழக்கு மாகாணத்தில் சேவை ஆற்றுதல்
4. நஷ்ட ஈடும் நலன்களும்.
   - (அ) இலவச மருத்துவ சிகிச்சை
   - (ஆ) கடமையின்போது காயமுற்றால் உறுப்பினருக்கு முழுச் சம்பளமும் விசேட விடுமுறையும் வழங்கப்படும்.
   - (இ) கடமையின்போது மரணமடைந்தால் சார்ந்திருப்போருக்குத் தனியாராயின், ரூபா 75,000 மும், திருமணமானவராயின் 1 லட்சத்து 75 ஆயிரமும் கிடைக்கும்.
   - (ஈ) உடல் ஊனத்துக்கு ஒரு லட்சத்துக்கு மேற்படாத அலவன்ஸ் தொகை.
5. கடமைகள்
   - (அ) பொது ஒழுங்கை பாதுகாத்தல், குழப்பத்தைத் தடுத்தல்—அடக்குதல், பொதுச்சொத்தைபாதுகாத்தல் ஆகியவற்றின் மூலம் பாதுகாப்பு சூழலை நிலைநிறுத்த உதவிபுரிதல்.
   - (ஆ) சமாதானத்தையும், ஒழுங்கையும் நிலைநிறுத்துவதற்கு அச்சுறுத்தலாக அமையும் தனிநபர்களையும், குழுக்களையும் உளவு பார்த்தல், கண்டறிதல், தடைக்காவலில் வைத்தல் ஆகியவற்றில் உதவி புரிதல்.
   - (இ) சமூக விரோதிகளை கைது செய்து நிராயுதபாணிகளாக்குவதில் உதவி புரிதல்.
   - (ஈ) யுத்தப் பொருட்களின் நடமாட்டத்தை தடுப்பதற்காக கள்ளக் கடத்தலுக்கு எதிரான நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு உதவி புரிதல்.
   - (உ) சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநிறுத்த உதவி புரிதல்.
   - (ஊ) இயற்கை சேதங்களால் ஏற்படும் அவசரகால நிவாரண நடவடிக்கைகளை அமுல்படுத்துவதில் உதவி புரிதல்.
6. மக்கள் தொண்டர்படை என்பது பொதுசேவையைச் சேர்ந்த நடுநிலைமையான படை. அது எந்த அரசியற் கட்சியுடனுமோ கட்சி ஊழியருடனுமோ தொடர்புடையதல்ல. வடக்குக் கிழக்கு மாகாணத்தில் உள்ள சுதந்திரமான மக்கள் தொண்டர்படை நிலையங்களிலிருந்து அது செயற்படும். இந்தப் படைக்கு சொந்த தலைமை அலுவலகம். ஆணை, (கமாண்ட்) அமைப்பும் இருக்கும்.
7. இத் தொண்டர்படையின் சொந்தப் பயிற்சி வசதிகள் ஸ்தாபிக்கப்படும்வரை இப் படைக்கு ஆரம்பத்தில் இந்திய அமைதிப்படை பயிற்சி அளிக்கும்.
8. மக்கள் தொண்டர்படையில் சகல பொது உணர்வுடைய, அர்ப்பணிப்பான, நடுநிலையான பிரஜைகளும் சேரலாம்.
9. மக்கள் தொண்டர்படை சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கும், பொதுச் சொத்திற்கும், தனியார் சொத்திற்கும், பாதுகாப்பளிப்பதற்குமான மாகாண அரசபடையாகும்.
10. சேர்க்கும் திகதி:-

    யாழ்ப்பாணத்தில் சேர்ப்பு, முன்னரே அறிவித்தவாறு நகர கொமாண்டரால் யாழ். பழைய பூங்காவில் 89 மார்ச் 30 ஆம் திகதி காலை 10 மணிக்கு நடத்தப்படும்.
11. பிற இடங்களிலான சேர்ப்புத் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

— மக்கள் தொண்டர்படை
கொமாண்டன்ற்
உத்தரவுப்படி.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட் [illegible] உள்ள அச்சகத்தில் 29-03-1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org